177

# கிறிஸ்தவர்களுக்கோர் வாயாப்பு.

A

5- OCT 1928
MADRAS

ஆசிரியர்:
மீ. இ. முஹம்மத் அப்துல்காதிர்,
முஸல்மான் ஆசிரியர்,
தென்காசி.

மீரானியா அச்சுக்கூடம்,
திருநெல்வேலி.
1928.

...லை ரூ 0—6—0
...வர்களுக்கு ரூ 0—4—0

QT
N28
77566

# முஸல்மான் புத்தகசாலை விளம்பரம்.

## இஸ்லாமார்க்க கிரந்தங்கள்.

| | | |
|---|---|---|
| திருநபி சரித்திரம் .... .... | விலை ரூ. | 2—4—0 |
| ஹஸ்ரத்பிலால் .... .... | ,, | 0—8—0 |
| சுன்னத்துஜமாஅத்தின் விசுவாசம் | ,, | 0—6—0 |
| நேர்வழிவிளக்கம் தீன்மணிமுழக்கம் | ,, | 2—4—0 |
| தஅலீமுல்இஸ்லாம்(தொழுகை,நோன்பு சம்மந்தமான மஸ்அலாக்கள்) | | 0—10—0 |

## காதியானி மதசம்பந்த கிரந்தங்கள்.

| | | |
|---|---|---|
| காதியானிமத ஆராய்ச்சி .... | விலை ரூ. | 1—0—0 |
| ரத்துல் காதியானி ... | ,, | 0—6—0 |
| குர்ஆன் ஆங்கில வியாக்யான ஆராய்ச்சியின் முகவுரை | ,, | 0—4—0 |
| அஹ்மதியர்களைப்பற்றியகோர்ட்டுதீர்ப்பு | | 0—2—0 |
| காதியானி பிரசாரமும் கம்பளை முஸ்லிம்களின் வெற்றியும் | ,, | 0—6—0 |

## ஆரியமத ஆராய்ச்சிகள்.

| | | |
|---|---|---|
| ஆரியமதத்தின் அந்தரங்கம் | விலை ரூ. | 0—4—0 |
| உண்மையார்த்த பிரகாசம் .... | ,, | 1—0—0 |
| ஆரியமத ஆராய்ச்சி ... | ,, | 0—2—0 |
| சுவாமிதயானந்தரின் புத்தியும் யுக்தியும் | | 0—4—0 |

# கிறிஸ்தவர்களுக்கோர்
# வாயாப்பு.

ஆசிரியர்
மீ. இ. முஹம்மத் அப்துல்காதிர்,
முஸல்மான் ஆசிரியர்,
தென்காசி.

மீரானியா அச்சுக்கூடம்,
திருநெல்வேலி.
1928.

விலை ரூ 0—6—0
கிறிஸ்தவர்களுக்கு ரூ 0—4—0

## இப்புத்தகம் கிடைக்கு மிடங்கள்.

---

1. மானேஜர், "முஸல்மான்" ஆபீஸ், தென்காசி.

2. ஜனுப். K. மகுதூம் சாஹிப்,
கீழத்தெரு, சங்கரன்கோவில்.

3. தப்லீகுல் இஸ்லாம் புக் ஏஜன்ஸி,
பெற்றி ஸ்டிரீட், கொழும்பு.

4. ஜனுப். P. முஹம்மத் முஹையதீன் சாஹிப்,
41 கப்பல்ரோட், சிங்கப்பூர்.

5. ஜனுப் M. காஸீம் மக்காய்,
கண்டிராக்டர் & மெர்ச்செண்ட்,
கிள்ளான். F. M. S.

C

ஈஸாவைக் கொல்லப்படவுமில்லை, சிலுவையிலறையப் படவுமில்லை, மேலும் அவரைப் போல் ஒருவன் ஆக்கப்பட்டான். (குர் ஆன்)

மேலும் அவரைத் தன்னளவிலுயர்த்திக்கொண்டான். (குர் ஆன்)

அவர் கியாமத்தின் அடையாளமாகவிருக்கிறார். (குர் ஆன்)

சமீபத்தில் எனது சகோதரர் மரியமுடைய மகன் ஈஸா (அலை) வானத்திலிருந்து இறங்குவார். ராவி இபுனு அப்பாஸ் (ரலி)

(நாயக வாக்கியம்)

# அட்டவணை.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| 1. முகவுரை. ... ... .... | |
| 2. வினா 1. ஹஸரத் ஈஸாவின் பிறப்பு அதிசயமென்பதற்கு விடை. ... | 1 |
| 3. எம் திருநபியவர்களின் ஜனன அற்புதம். .... | 5 |
| 4. வினா 2. பீவி மரியம் எல்லோரைவிடச் சிறந்தவர்களென்பதின் ஆராய்ச்சி. .... | 7 |
| 5. எம் லோகநாயகரே கிறிஸ்தவர்களுக்கு ஹஸரத் மரியமின் பத்தினித்தனத்தை கற்பித்துக் கொடுத்தனர். ... ... | 9 |
| 6. வினா 3. மஸீஹ் பிறந்த சமயம் பட்டுப்போன மரம் தழைத்ததென்பதற்கு விடை. .... | 13 |
| 7. நபிகள்பிரானவர்களின் ஜனன சமயமும் அதற்கு முன்னும் நிகழ்ந்துள்ள அற்புதங்கள். | 15 |
| 8. வினா 4. மஸீஹ் (அலை) பாலப்பருவத்தில் வசனித்ததைப் பற்றிய ஆராய்ச்சி. ... | 16 |
| 9. பாலப்பருவத்தில் மொழிந்ததின் இரகசியங்கள். | 18 |
| 10. வினா 5. மஸீஹ் அவர்களை விரோதிகளைவிட்டும் தூக்கிக்கொள்ளப்பட்டது என்பதற்கு விடை.... | 22 |
| 11. பைபிலின்படி மஸீஹ் அவர்களை சிலுவையிலறையப்படவில்லை. ... | 24 |
| 12. குர்ஆனும் மஸீஹ் சிலுவையிலறையப்படவில்லை வேறொருவர் அறையப்பட்டாரென்பதை உறுதிப்படுத்துகிறது. ... .... | 26 |
| 13. ரபஉ என்றபதத்தின் பொருளும் வியாக்யான கர்த்தாக்களின் விரிவுரையும். .... | 29 |

14. தப்புமார்க்கத்தார் ரபஉ என்ற பதத்திற்குச் செய்யும் தப்பர்த்தமும் மறுப்பும். ... 29

15. வினா 6. மஸீஹ் விண்ணுலகத்தில் ஊண் குடிப்பு இல்லாமல் ஜீவித்திருக்கிறார்களென்பதைக் குறித்த ஆராய்ச்சியும் விடையும். ... 33

16. ஹஸரத் மஸீஹ் 120 வருடம் ஜீவித்திருந்தார்களென்பது தவறென்பதும் வானுலகுக்கு சரீரத்துடன் உயர்த்திக்கொள்ளப் பட்டார்களென்பதன் ஆதாரமும். ... .... 34

17. மூஸாவும் ஈஸாவும் ஜீவித்திருந்தால் என்ற விஷயத்தைப்பற்றிய ஆராய்ச்சி. .... 37

18. வினா 7, 8. செத்த பிரேதங்களுக்கு உயிர் கொடுத்ததும் வியாதியஸ்தர்களை சொஸ்தப் படுத்தியதையும் பற்றிய வினாவுக்கு விடை. .... 40

19. மஜ்மவுல் பிஹார் என்ற நூலில் ஹஸரத் மஸீஹ் இறந்துவிட்டதாக மாலிக் சொன்னது உண்மையா? 41

20. அதபிய்யா வென்னும் நூலில் இமாம் மாலிக் மஸீஹ் இறந்துவிட்டார்களெனக் கூறினது உண்மையல்ல வென்பதும், மஸீஹ் (அலை) இவ்வுலகத்திற்கு மறுமுறை வருவார்களென்பதைப்பற்றிய நாயகவாக்கியங்களும். ... .... 42

21. மஸீஹ் (அலை) உயிருடனிருப்பதாகச் சொல்லும் வாக்கியம் கட்டுக்கதை யென்றும் குர்ஆனிலும் ஹதீதிலும் அவ்வாறில்லை யெனக்கூறும் தப்புமார்க்கத்தாரின் நிலைமை. ... ... 43

22. வினா 9. இயேசுநாதர் மறைவான விஷயங்களை யறிந்து சொன்னார்களென்பதைக் குறித்த ஆராய்ச்சியும் விடையும். .... .... 45

**23.** வினா 10. நபியவர்கள் பாவமன்னிப்பு தேட வேண்டு மென்பதைப்பற்றிய ஆராய்ச்சியும் விடையும். .... ... ... 46

24. வினா 11. உங்கள் நபி மண்ணுலகுக்குள்ளும் எங்கள் மஸீஹ் வானத்தின்மீதும் ஜீவித்திருக்கிறார்களென்பதைப் பற்றிய ஆராய்ச்சி. ... 48

25. ஹஸரத் மஸீஹ் அவர்களை விண்ணுலகுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதின் உண்மைக் கருத்துகள். .... ... 48

26. வினா 12. மஸீஹ் மறுமுறை தோன்றி ஆதாமின் சந்ததியார்களை ஆதரிப்பார்கள் என்பதைக் குறித்த ஆராய்ச்சியும் விடையும். .... 52

27. வினா 13. தஜ்ஜாலைக் கொன்று முஸ்லிம்களைக் காப்பாற்றுவார்கள் என்பதை பற்றிய ஆராய்ச்சி. 54

28. இயேசுநாதர் வானத்திலிருந்து வருவதன் நோக்கம். .... ... .... 55

29. வினா 14. இயேசுநாதர் அல்லாவின் ரூஹ் என்பதைப் பற்றிய ஆராய்ச்சி. ... 57

30. வினா 15. இயேசுநாதர் பல அற்புதங்களைக் காட்டியுள்ளார், உங்கள் நபி அவ்வாறு காட்டவில்லை என்பதற்கு விடை. .... .... 58

31. அற்புதம் காட்டவில்லையென்பதன் காரணம் ... 59

32. வினா 16. முன் வேதங்கள் பூர்த்தியாயிருக்க புதிய வேதம் வரவேண்டியதேன் என்பதற்கு விடை. ... ... .... 63

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி. | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 22 | ஆயத்தின் | ஆவியின் |
| 6 | 10 | ஸாவாலென்ற | ஸாவாவென்ற |
| ,, | 27 | பெனும் | வெனும் |
| 7 | 29 | ஸத்தீக்கா | ஸித்தீக்கா |
| 9 | 15 | ,, | ,, |
| 11 | 14 | தெளிந்து | தெளித்து |
| 14 | 3 | எவ்வாரேனும் | எவ்வாறேனும் |
| 15 | 15 | உதையமாவரெ | உதயமாவாரெ |
| 17 | 17 | வரலாராவது | வரலாறுவது |
| 21 | 6 | எனும் | என்றும் |
| 24 | 13 | தர்ஜமா | தர்ஜுமா |
| 25 | 17 | செய்கிறார்கள் | செய்கிறார் |
| 33 | 2 | பட்டவர்கள் | பட்டார்கள் |
| 35 | 5 | ஹஜ்ஜுல் | ஹஜஜுல் |
| ,, | 17 | ,, | ,, |
| ,, | 19 | ,, | (1) |
| ,, | 24 | ,, | ,, |
| 36 | 5 | ,, | ,, |
| ,, | 9 | ,, | ,, |
| ,, | 14 | ,, | ,, |
| ,, | 15 | ,, | ,, |
| ,, | 23 | பொக்கட்டு | பொய்க்கட்டு |

| பக்கம், | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 41 | 19 | வாதிகளில் | வாதிகளின் |
| 43 | 13 | எழுப்புவோம் | எழும்புவோம் |
| ,, | 15 | ரௌஹா | ரௌஹா என்ற ஸ்தலத்தில் |
| 49 | 7 | கதாரதா | கதா தா |
| 51 | 23 | ஹித் | கீத் |
| ,, | 27 | ஹஜ்ஜால் | ஹஜஜால் |
| 57 | 5 | என்னும் | என்றும் |
| ,, | 6 | எனும் | என்றும் |
| 60 | 28 | காட்ட | கட்ட |
| 61 | 19 | அறிவுறுத்தி | அறிவுறுத்த |
| 63 | 21 | வகுத்துரை | வகுத்துரைக்க |

# முகவுரை.

தற்காலம் மத ஆராய்ச்சி மிக மும்மரமாக நடைபெறுகிறது. ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் மதமே சுயம் என்றும் அருள் வேத மென்றும் எண்பிக்க அரும்பாடுபடுகின்றனர். கிறிஸ்தவர்கள் அதி விசேஷமாக இவ் விடயத்தில் எல்லோரைவிட முன்னணியில் நிற்கப்பார்க்கிறார்கள். இவர்கள் எவ்விதத்திலும் தங்களது பைபில் வேதவாக்கென்றும் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களை எல்லா நபிமார்களைவிடச் சிறந்த உச்சஸ்தானத்தை யுடையவர்க ளென்றும் எண்பிக்க செய்யும் பிரயத்தனங்கள் அளவுகடந்தவை. சர்வ சமயத்தாரும் தத்தம் மதமே மெய்யென்றும் வேதவசன மென்றும் ஸ்தாபிக்க முயற்சிக்கிறது சரியே. எனினும், உண்மையைத் தெரிந்தவிடத்து அதை மறைத்து கண்ஜாடையாக விட்டுவிட்டு பொய்களையும் தவறுகளையும் தன் கக்ஷியின் அநுகூலத்திற்காகச் சேர்த்துக் கொள்வதுதான் அருவருக்கத்தக்க விஷயம். இதனால் உண்மைக்கு உழைக்கிறார்க ளென்று சொல்வதற்கு முடியவில்லை. கிறிஸ்தவர்கள் வேத வசனமென்று விஸ்வாஸித்துவரும் பைபில் எக்காலத்தில் யாரால் எப்பாஷையில் எழுதப்பெற்றது. அதை மறு பாஷையில் பெயர்த்தவர் யாவர். அவரின் உண்மை நிலை யாது என்பதை அறிவதை ஒதுக்கித் தள்ளிவிட்டு இதர வேதங்களின் மீது ஆக்ஷேபிக்கவும் தூஷிக்கவும் ஓடோடி முன் வருகின்றனர். கிறிஸ்தவர்களின் பைபில் வேதத்தை இன்னாரால் இன்ன காலத்தில் இயற்றப்பட்ட தென்பதை அவர்களின் குருக்களாலேயே ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வராமலிருக்கும்போது அதன் நிலைமையைக் குறித்து அதிகம் சொல்வானேன்? இவ்வித நிலையிலிருந்துகொண்டு துண்டுப் பிரசுரங்கள் நோட்டீஸ்கள் மூலம் பற்பல கேள்விகளைக் கேட்டு ஏழைமக்களை ஐயுறச் செய்கின்றனர். இவ்விதக் கேள்விகளில் லூதியானா நகரிலுள்ள பாதிரிகள் 14 விஷயங்களை குர்ஆனைக்கொண்டே எழுதி இவ்வாக்கியங்களால் ஹஸ்ரத் முஹம்மது நபியவர்களைவிட ஹஸ்ரத் மஸீஹே சிறந்தவர்

களென்று வாதித்து சந்திகள்தோறும் இதற்கு பதிற்கூறு வாருண்டாவென அழைக்கிறார்கள். இதற்கு காதியான் வகுப்பைச் சார்ந்தோரால் எழுதப்பட்ட மறுப்பு ஒன்று "இயேசுவின் இரகசியம்" என்று வெளிவந்திருக்கிறது. இது சரியான மறுப்பென சிலர் கூறினும் இப்புத்தகத்தைக்கொண்டு கிறிஸ்தவர்களை எதிர்த்தால் அவமானமும் தோல்வியும் முஸ்லிம்களுக்கு நேரிடுமென்பது வெள்ளிடை. ஏனெனில் இக்கிரந்தகர்த்தாவான மௌல்வி முஹம்மதலி எம். ஏ., எல். எல். பி. என்பவர் தமது குருவான மிர்ஸா குலாம் அஹ்மத் என்பவரைப்போல் இந்நூலில் பொய்களை மலிவாக நிறப்பியிருக்கின்றார். மேலும் இதை தமிழில் உரைசெய்தவர் இன்னாரென்று அறிவிக்கப்படவில்லையாயினும் அவரின் அருமைச் சிஷ்யரொருவரால் மொழிபெயர்க்கப்பட்டதென எழுதப்பட்டிருக்கிறது. மொழிபெயர்த்தவரின் நாமம் மறைக்கப் பட்டிருக்கிறது கவனிக்கத்தக்கது. எனவே, இது முஸ்லிம்களுக்கும், மற்றவர்கட்கும் பலன் தருமென கூறத்துணியோம்.

ஆதலின் சுன்னி முஸ்லிம்களின் சார்பாக இப்பதினாறு கேள்விகளுக்கும் தக்க விடைகொடுத்து இஸ்லாத்தின் உண்மையை நிலைநிறுத்துவது அபிமானிகளின் கடமையாதலின் நம் உலமாக்களின் கிரந்தங்களை மேற்கோளாகக்கொண்டு இப்புத்தகத்தை வரையலானேன்.

இந்நூலை வெளியிட நிதியுதவிய பத்னாபுரம் ஜனாப் சி. அசன் குட்டி ராவுத்தரவர்களின் மருகர் ஆலப்புழை, எச். பி. அஹ்மது ராவுத்தர், Travancore Legislative Council Member அவர்களுக்கு எம் மனமார்ந்த வந்தனத்தை சமர்ப்பித்துக்கொள்வதுடன் அவர்களுக்கு ஈருலக வாழ்வையும் ஸாலிஹான அமலையும் பூரண ஈமானையும் கொடுத்தருளும்படி இணையில்லா இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மீ. இ. முஹம்மத் அப்துல்காதிர்,
"முஸல்மான்" ஆசிரியன், தென்காசி.

بسم الله الرحمن الرحيم

# கிறிஸ்தவர்களுக்கோர் வாயாப்பு.

## வினா:- 1.

ஹஸ்ரத் ஈஸா(அலை) அவர்களின் பிறப்பு அதிசயமும் அற்புதமுமென்பது குர்ஆன்ஷரீபின் மூலம் ருஜுவாகிறது. இவ்வித அற்புதங்களி லொன்றும் ஹஸ்ரத் முஹம்மது ஸாஹிபு அவர்களுக்கு ஏற்படாததால் உங்கள் நபியை விட எங்கள் மஸீஹே சிறந்தவர்.

## விடை:- 1.

நிச்சயமாக ஹஸ்ரத் மஸீஹ்(அலை)பிதாவன்றி பிறந்தது உண்மையே. உலக முஸ்லிம்களின் ஏகோபித்த கொள்கையும் அதுவே, குர்ஆன்ஷரீப் ஸூரய மர்யமில் ஹஸ்ரத் மர்யம் ஸ்நான அறையை விட்டு வெளியேறினதும் ஓர் யௌவன புருஷன் வடிவத்தில் ஜிபுரீல் (அலை) தோன்றி "மர்யமே! உனக்கொரு துப்புரவான மகவையளிக்கவந் திருக்கிறே"னெனக் கூறியபோது ஹஸ்ரத் மர்யம்(அலை)எனக்கு எங்கிருந்து குழந்தை பிறக்கும்; என்னை ஒரு மனிதனும் தொடவில்லை. நான் துர்நடப்புள்ளவளுமில்லையே என்ற போது இவ்வாறு (பிதாவன்றி சிருஷ்டிப்பது) என்பேரில் எளிது. இப்படியே இறைவன் உத்தரவு செய்தான் என்றனர்.

பின்னர் குழந்தையைப்பெற்றெடுத்து ஜனங்கள் முன் கொணர்ந்தபொழுது, ஜனங்கள் ஏ மர்யமே! உனது தாய்

தந்தையர் துர்கடத்தையுள்ளவர்களல்லவே. நீ இம்மகவை எங்கிருந்து பெற்றனை என்று சிந்தித்தபோது, நான் இன்று நோன்பு நோற்றிருக்கிறேன், எவருடனும் பேசமாட்டேன் இப்பாலகனிடம் கேட்டுக்கொள்ளுங்களென்று சமிக்கை செய்ய அன்னார் நாங்கள் இக் குழந்தையிடம் எங்ஙனம் வார்த்தையாடுவோமென வியப்புற்றபோது, அக்குழந்தை (ஈஸா (அலை) வாய்திறந்து "நான் அல்லாவின் அடிமையே; எனக்கு அவன் வேதத்தை அளித்தான். இன்னும் அவன் நபியாக ஆக்கினது மன்றி எந்தவிடத்திலிருந்தபோதிலும் என்னை க்ஷேமமுடையவனாகவும் நான் ஜீவித்திருக்கும் வரை தொழும்படியும் ஸகாத் (ஏழைவரி) கொடுக்கும்படியும் கண்டிப்பாய் கட்டளையிட்டான். மேலும் என் மாதாவுக்கு நன்றிபாராட்டுகிறவனாகவும் ஆக்கினது மன்றி என்னை அதிகாரம் துரதிருஷ்டமுள்ளவனாகவும் படைக்கவில்லை. இன்னும் எந்நாள் நான்பிறந்தேனோ இன்னும் எந்நாள் மறிப்பேனோ இன்னும் எந்நாள் மறுமுறை உயிர்த்தெழும்பி நிற்பேனோ என்மீது ஸலாம் (கடாக்ஷம்) உண்டாயிருக்கிறது" என மொழிந்தார்கள். (ஸூரா மர்யம்) இன்னும் பாலுண்ணும் குழந்தைப் பருவத்தில் மூன்று குழந்தைகள் பேசியிருக்கிறார்கள். அதிலொருவர் ஈஸா (அலை) அவர்களாகும் என எம் நபிகதிலகம் அவர்கள் கூறியிருக்கிறார்கள் (புகாரி) மேலும், நபிகதிலகம் தங்கள் விரலைச்சூப்பி ஹஸ்ரத் ஈஸா (அலை) பாலருந்திக்கொண்டிருந்த விதத்தைக்காட்டினார்கள். அதை நினைக்கும்போது இப்போதும் நாயகமவர்களைப் பார்த்ததுபோ விருக்கிறதென்று ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) கூறுகிறார்கள்.

எனவே, இவ்வாறு பிறந்த நாற்பதாம்நாள்பருவத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) மொழிந்த வாக்கியங்களைச் செவி

யுற்ற யூதர்கள் திகைத்து மயங்கிச் சென்றுவிட்டனர். மேலும், அக்காலத்தில் விபசாரத்திற்கென்றிருந்த கொலையைப் புரியவுமில்லை. யூதர்கள் இவ்விஷயத்தை வெளியிட்டால் ஜனங்கள் அவர்கள்மீது விசுவாசங்கொண்டுவிடுவார்களென்ற பொறாமையின்மீது இவ்விஷயத்தை மறைத்துவிட்டார்கள்.

மேற்கூறிய விஷயங்களை ஆராயுமிடத்து கீழ்க்கண்ட விஷயம் நன்கு புலனாகும்.

(1) ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) மர்யம்பீவியிடம் மகவையளிக்கவந்தேனென்றபோது அவர்கள் என்னை மனிதர் தொடவில்லை. நான் துர்நடத்தையுள்ளவளுமல்லவே, என்க அமரர் இறைவனுக்கு இஃதோர் பெரியகாரியமன்று, இப்படியே உத்தரவுசெய்தான் என விடையிறுத்தனரேயன்றி, நீ விவாகஞ்செய்வாய் எனக் கூறவில்லை. (2) ஹஸ்ரத் மர்யம் (அலை) குழந்தையை ஈன்றெடுத்துக்கொண்டு வந்தபோது மர்யமே! உனது முன்னோர் துர்நடத்தையுள்ளவர்களல்லவே பின்னை இக்குழந்தையை எங்கிருந்து கொணர்ந்தனை என நிந்தித்தபோது எனக்குப் பர்த்தா உண்டுமென்று பகராமல் இக்குழந்தையிடம் கேட்டுக்கொள்ளுங்களெனக் கூறிவிட்டார்கள். யூதர்கள் தண்டிக்காமலும் விட்டுப்போய் விட்டார்கள். எனவே, இதுபோற் பல அத்தாக்ஷிகளால் ஹஸ்ரத் ஈஸா (அலை) பரிசுத்த ஆயத்தின் தத்துவத்தால் பிதாவன்றி ஜனனமானார்களென்று குர்ஆனெகரீம் ஹதீது ஷரீபின்மூலம் ஸ்பஷ்டமாகவும் தெளிவாகவும் ருஜுவாகிறது.

யூதகோஷ்டியார் (நவூதுபில்லாஹ்) விபசாரத்தில் பிறந்தார்களென சாதிப்பது பொய்யும் பொறாமையுமென்றும் பைபிளில் “அவன் இப்படிச்சிந்தித்துக்கொண்டிருக்கையில்

கருத்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்கு காணப்பட்டு தாவீதின் குமாரனாகிய யோசேப்பே! உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே! அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. (மத்தேயு. 1. 20.) என்னும் வாக்கியத்தில் யோசேப்பின் மனைவி மரியாளெனக் கூறப்பட்டிருக்கிறதும் அதுபோன்ற பல வாக்கியங்களும் அபத்தமும் தவறுமென எமது திருமறை பலமாகக் கண்டித்து மர்யம் விவாகம் செய்யவில்லையென்றும் ஹஸ்ரத் ஈஸா(அலை)பரிசுத்த ஆவியின் மீது உற்பத்தி யானார்களென்றும் அவர்களது பரிசுத்தத் தன்மையை வெகு தெளிவாக உலகிற்கெடுத்தோதியதற்காக எம் கிறிஸ்தவ நண்பர்கள் என்றும் முஸ்லிம்கள்மீது நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளன ரென்பதை அறியக்கடவர்.

இயேசுநாதர் (அலை) தந்தையின்றி ஜனனமானதினால் சிறப்புக் குறியவரெனக் கூறுவதற்கு எவ்விதத்திலும் பொருத்தமான காரணம் காணப்படவில்லை.

(1) உலக இயற்கைக்கு மாற்றமாக ஒரு சிறிதும் நடைபெறாதென இறைவனின் தத்துவத்தை மறுத்த தத்துவ சாஸ்திரிகளின் கெர்வத்தை யொழிக்க இறைவன் இவ்வாறு ஜனனமாகச் செய்தான். இது இறைவனின் தத்துவத்தை வெளிப்படுத்துகிறதேயன்றி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் பெருமையைக் குறிப்பதல்ல. (2) பிர்அவுனிடம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் கோல் சர்ப்பமாய் மாறிவிட்டது. (2. மோசே. 7. 10 பார்க்க)

உயிரற்ற கோலிலிருந்து உயிருள்ள வஸ்து வெளிப்படுகிறதும், பின்னர் கோலாக மாறிவிடுகிறதுமானால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஜனனத்தைவிட இது பெரிய ஆச்

சரியமல்லவா? (3) மலிக் சித்தீக் என்பவனைப்பற்றி இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன். இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல் (எபிரேயர் 7-3) என்ற ஓர் வசனம் பைபலில் காணப்படுகிறது. தந்தையின்றி பிறந்தது சிறப்புக்கும் அற்புதத்துக்கும் காரணமானால் வம்சவரலாறே இல்லாமல் ஜனித்தது அதைவிடப் பெரிய புதுமையும் சிறப்புமல்லவா? (4) ஹஸ்ரத் ஆதம் ஹவ்வா (அலை) அவர்களைப்பற்றி "தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்மாவானான். (1ம் மோசே 2. 7.) தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். (ஷை 2. 22) என்ற வாக்கியத்தில் தாயும் தகப்பனுமின்றி இவ் விருவரையும் சிருஷ்டித்திருப்பதினால் தாயிலிருந்து ஜனனமானவர்களைவிட இவ்விருவரும் மகா சிறந்தவர்களென கிறிஸ்தவ நண்பர்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமல்லவா? அன்றென்றால் ஹஸ்ரத் மஸீஹின் ஜனனத்தைப்பற்றிய உங்களது நம்பிக்கை குருட்டு நம்பிக்கை என்பது வெளிப்படையே.

தவிர, உங்களது நபியவர்கள் ஜனனமாகும்போது இவ்வித அற்புதங்களிலொன்றேனும் நிகழவில்லை யென்பதும் அறிவீனமாகும். எமது லோகநாயகரவர்கள் ரபீஉல் அவ்வல்மீ 12உ திங்கட்கிழமை அதிகாலையில் இவ் வவனியிற் றோன்றும்போது நிகழ்ந்த அதி ஆச்சரிய சம்பவங்கள் பல உள. (1) பாத்திமாபின்து அப்துல்லாவென்னும் மாது கூறுகிறார்: லோகநாயகரின் அவதாரத் தினத்தின் இரவில் நான் ஆமீனா நாயகியின் சமீபத்திலிருந்தேன். வானத்திலுள்ள நட்சத்திரக்குலங்கள் கீழிறங்கிக்கொண்டுவந்தன.

ஹறம் என்ற பூமியின் சமீபம் எவ்வளவு நெருங்கி வந்ததெனின் பூமியின்பேரில் விழுந்துவிடுமென நினைத்தேன். (2) அவ்வமயம் உலகத்தின் பாகங்களில் விசேஷமாக மக்கமாநகரத்திலுள்ள விக்கிரகங்கள் குப்புற அடித்து வீழ்ந்துவிட்டன.* (3)நெருப்பை வணங்கும் மஜூஸியர்களால் பாரிஸ்தேசத்தார் சுமார் ஆயிரம் வருஷம் அணையாமல் எரித்துக்கொண்டிருந்த நெருப்பு அவ்வமயம் அணைந்து நூர்ந்துவிட்டது. (4) ஈரான் தேச அரசனான நவஷேர்வானின் ராஜமாளிகை அதிர்ந்துவிட்டதுமன்றி அதன் பதினான்கு கற்கள் பெயர்ந்து வீழ்ந்தும் விட்டன. (5) ஸாவாவென்ற பெருநதி முற்றிலும் வற்றிப்போய்விட்டது. (6) ஸமாவாவின் நதி ஆயிரம் வருடமாக வற்றிப்போயிருந்தது ஓட ஆரம்பித்தது. (7) இன்னும் நபிகள் சிரோன்மணியவர்களைப் பெற்றெடுத்தபோது ஓர் ஒளி பிரகாசித்தது. அதனால் ஷாம் தேசத்தின் கட்டடங்கள் ஹஸரத் ஆமினுபீவியவர்களுக்குத் தோன்றலாயின.

மகிதலம் புகழீசா நபிபாரில் வந்த
  நாட்டொடுத் திடைவிடாது
பகுமத மிலை யென்றூறு நூறாண்டு
  பாரிசுகாரர்கள் வணங்கும்
புகையுடன் கெழுமிப் பொறிபல தெரிப்பப்
  புரிந்தெழு மக்கினிக் கொழுந்து
திகைதொறுந் தெரிய வெரிந்த செந் நெருப்புத்
  தேய்ந்து நூந் தழிந்தன வன்றே.
படியிடை புடைப்பப் பெருக்கெடுத்ததிரப்
  பாயலை சுருட்டிவிட் டெறிய
விடுகடல் சாவா பெனும் பதியிடத்தில்
  வெறுந்தரை யாயின வறந்து

---

* இவ்விஷயம் இஸ்லாமிய சரித்திரத்தைத்தவிர ஸர்தஸ்தவென்னும் மஜூஸியர்களின் சரித்திரத்திலும் காணப்படுகிறது.

குடிலமட்டோங்கி மஞ்சடை கிடக்குங்
    கொத்தள மொரு பதினன்கு
மிடிபட வீழ்ந்து சேருவானகர
    மெங்கணுங் கலங்கிய தன்றே
சிலையெடுத்துருவாய் வைத்த புத்தனைத்துஞ்
    சிரசு கீட்பட முகங்கவிழ்த்த
சலமதி விபுலீசியற்றிய சிங்காசனமு
    மன்றிடிந்தன சயித்தான்
குலமுமன்றொதுங்கி வானகம் புகாமற்
    கூண்டுநக் கோத்திர மெரிந்து
நிலமிசை வீழ்ந்த வினஞ் சில புதுமை
    நிகழ்த்துதற் கறிய தன்றிரவே. (சீறா.)

(இஸாலத்துஷ்ஷூகூக் 605 ப. தவாரிக் ஹபீபெ இலாஹ் ஷரஹூஸ்ஸுன்னு மிஷ்காத்.)

இந்நிகழ்ச்சிக் குறிப்புகளிலநேக இரகசியங்கள் அடங்கியுள்ளனவாயினும் விக்கிரகம் தொழுதலும், அக்கினிவணக்கமும் அடியோடொழிந்து இப்பூவுலகிற்கோற் அதிசய ஒளி தோன்றப்போகிறதென்றும் ஈரானியப் பதிகளில் பதினன்கு அரசர்களுக்குப்பின் அத்தேசம் இஸ்லாம் வயப்பட்டுவிடுமென்றும், முன் நடந்துகொண்டிருந்த அஞ்ஞான வெள்ளம் வற்றி புதிய மெஞ்ஞான சாகர வெள்ளம் அணைகடந்தோடுமென்றும் தெரியவருவதால் இவை ஹஸரத் ஈஸா நபியவர்களின் ஜனன அற்புதத்தைவிட மகா சிறந்ததென்பதை விபரிக்கவும் வேண்டுமோ? என்னே மாகூஷிமை தங்கிய நபியின் மகிமை!

## வினு:- 2.

இயேசுநாதரின் மாதாவைப்பற்றி இவ் வையகத்திலுள்ள ஸ்திரீகளனைவரிலும் மகத்துவமுடையவரென்றும் ஸத்தீக்கா வென்ற உயர்தரப் பட்டம் கொடுக்கப்பட்டவ

ரென்றும் இயேசுநாதரின் ஜனனத்தின்போது அமரர் மூலம் முன்னறிக்கை கிடைக்கப்பெற்றவரென்றும்; உங்களது வேதமாகிய குர்ஆன் கூறுகிறது. இங்ஙனமாக உங்களது நபியவர்களின் மாதாவைப்பற்றி குர்ஆனில் புகழ்வதொருபுறமிருக்கட்டும்; பெயர்கூடச் சொல்லப்பட்டில்லை. இன்னும் உங்களது நபியவர்களின் ஜனனத்தின்போது ஓர் முன்னறிக்கை வந்ததாகவும் குர்ஆனில் கூறப்படவில்லை. மேலும், உங்களது நபியவர்களின் மாதாவுக்கு ஈமான் உண்டுமா வென்பதைப் பற்றியும் சில முஸ்லிம்கள் சந்தேகிக்கின்றனர். ஆதலின் இயேசுநாதரே சிறந்தவரென்பது புலனாகவில்லையா?

## விடை:- 2.

கிறிஸ்தவர்களுக்கு பெருமை இன்னது என்ற விஷயம் விளங்காததாலும் ஹஸ்ரத் மரியம் ஹஸ்ரத் ஈஸா (அலை) இவர்களை எவ்விதத்திலும், எல்லோரைவிட சிறப்பித்துக் காட்டவேண்டுமென்ற நோக்கத்தினாலும் இவ்வாறு வனாகின்றனர். ஆதலின் ஆராய்ச்சிக்கும் இவர்களுக்கும் சிறிது சம்பந்தமில்லை. தாயின் பெருமைக்கும் மைந்தரின் மகிமைக்கும் பெரும் வித்தியாசமுண்டு. தாய் சிலாக்கியமுடையவரென்ற காரணத்தால் மைந்தரும் சிலாக்கியமென்று கூறக் காரணமில்லை. ஹஸ்ரத் ஹவ்வா (அலை) சிலாக்கியமுடையவரென்றால் அவர்களின் பிள்ளைகள் அனைவரும் சிலாக்கியமுடையவரென்று எவரும் கூற முன்வரார். அவ்வாறுகூற முன்வரும் பக்ஷம் அவர்கள் வயிற்றிலிருந்து ஜனனமான எல்லோரும் சம அந்தஸ்து உடையவர்களாக ஒத்துக்கொள்ள வேண்டும் அப்போது ஹஸ்ரத் மரியமும் அவர்களின் குமாரரும் எல்லோரைப்போல் ஓர் சாமான்யரென்றே ஏற்படும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும் அவர்களின் பிதாவுக்கும் ஏற்பட்ட வித்தியாசத்

தைக் கொண்டே உண்மை புலனுகும். ஆதலின் மாதாவின் பெருமையினுல் மைந்தரும் பெருமையுடையவ ரெனக் கூறுவது அர்த்தமற்ற வெருங் கூற்ருகும்.

குர்ஆன் ஷரீபில் ஆலஇம்ருன் சூருவில், நிச்சயமாக ஆதம் (அலை) நூஹ் (அலை) அவர்களையும் இன்னும் இப்ருஹீம் (அலை) அவர்களின் குடும்பஸ்தர்களையும் இம்ரானுடைய குடும்பஸ்தர்களையும் உலகத்தார்களைவிட அல்லாஹ் தெரிந்தெடுத்திருக்கிருன் என்று ஓர் வாக்கியம் காணப்படுகிறது. இதனுலும் அக்காலத்திலுள்ளவர்களைவிட அவர்கள் சிறந்தவர்களென ஏற்படுகிறதேயல்லாது உலக முடிவு வரையிலுமுள்ள எல்லோரினும் சிறந்தவர்களென ஏற்படுவதில்லை. ஆதலின் ஹஸ்ரத் மரியம் (அலை) அவர்களைப்பற்றிய நற்சாக்ஷி பத்திரமும் அக்காலத்திலுள்ளோரைவிட கண்யமுடைவரெனக் குறிப்பிடுமேயன்றி வேறல்ல வென்பது பிரத்தியட்சம். ஸத்தீக்கா வென்ற உயர்தரப்பட்டம் மற்ற நபிமார்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதாக குர்ஆன் அருளப்பட்டிருப்பதைக்கொண்டே எல்லாக் காலத்திற்கும் மேல் என்று வாதிக்கக் காரணமில்லை யென்பதை ஈண்டு நன்கு தெரிந்து கொள்கிருேம்.

எமது குர்ஆனே ஹகீம் இறங்குவதற்குமுன் யூதர்கள் நாங்களே ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை) அவர்களின் சந்ததிகளென்றும் பூமியின் அரசுக்குரியவரென்றும் தௌராத் மாற்றப்படாததும், இறுதிவேதமுமென தீர்மானித்திருந்தனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மாதாவையும் நிந்தித்து பொய்யரென்றும் விபசாரப் புத்ரரென்றும் பொய்மொழி சாற்றிவந்தனர். இவ்விஷயம் கிறிஸ்தவர்களுள்ளும் பாவி அன்ஞரும் மரியம்பீவி யவர்களின் பத்தினித்தன்மையில் சந்தேகித்துவிட்டனர்.

சரித்திராசிரியரான கிபன் கூறுகிறார். "ஹஸ்ரத் மரியம் பீவியின் கற்பும் பத்தினித்தனமும் இன்னும் அவர்களை விபசாரத்தைவிட்டும் நிவர்த்திக்கத்தக்க எண்ணமும் எல்லோரையும்விட முதலில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு உதித்தது. அவர்கள் மகா அழுத்தமாக ஹஸ்ரத் மரியம்பீவி யவர்களை தூய்மைப்படுத்தினார்கள். அன்றியும் அவர்களைப் பத்தினித்தன்மை யுடையவரென்றும் உண்மையுடையவரென்றும் தீர்மானித்தார்கள். விபசாரத்தைவிட்டும் நிவர்த்தித்து (ஹஸ்ரத் ஈஸா பிதாவன்றி ஜனித்ததை)பரிசுத்த ஆவியின்மூலம் என எண்பித்தனர்." இந்த (பிதாவன்றி ஜனித்த) விஷயம் ஐரோப்பா சிலுவை யுத்தத்தில் வெளிப்பட்டபோது ஸேனட் பர்னுடத், என்பவர் இதை யொரு நூதன சிருஷ்டியெனத் தள்ளிவிட்டார். அவர் (நஊது பில்லாஹ்) ஹஸ்ரத் மரியமுக்கு ஹஸ்ரத் ஜிபுரீலின் காமதுகர்ச்சியினால் கெர்ப்பம் தரிபட்டது என்ற விஸ்வாசமுடையவராயிருந்தார். (டெக்லாயின் செயின்ட் பால் ஆப்தீ ரோமன் எம்பாயிர்)லேகி எழுதுகிறார். சிலுவை யுத்தத்தினாலேற்பட்ட நன்மை யென்னவெனின் (முஸல்மான்களின் சகவாசத்தால்) ஹஸ்ரத் மரியமின் கற்பு பத்தினித்தனம் ஐரோப்பிய கிறிஸ்தவர்களின் விஸ்வாசங்களில் நுழைந்துகொண்டது. வியப்பென்னவெனின் இஸ்லாத்தின் நிலைமை தெரிந்துகொள்வதற்குமுன் அதி நூதனமும் ஆச்சரியமுமான விஸ்வாசங்களெல்லாம் ஐரோப்பாவில் கிளம்பிக்கொண்டிருந்தன. சிலர் ஒரு புறு வீரியத்தை எடுத்துக் கொணர்ந்து ஹஸ்ரத் மரியமின் செவியினுள் விட்டு விட்டதென்றும் அந்த விந்து அங்கிருந்து நேரே வயிற்றினுள் சென்று கெர்ப்ப அறையில் புகுந்ததென்றும் நம்பிக்கை கொண்டிருந்தனர். (ரீஷ் நல்ஸம் வால்யம் 1) (அஸ்தக்பிருல்லாஹ்.)

எனவே, யூதர்கள் கற்பரசியான ஹஸ்ரத் மரியமின் மீதும் அவரது புத்திரர் ஹஸ்ரத் ஈஸா (அலை) மீதும் பாரப் பழி மொழியைச் சுமத்துகிறதையும் கிறிஸ்தவர்கள் அதைக் கண்டித்து தக்க மறுமொழிகொடாமல் அவர்களும் மெதுவாக ஆதரிக்கிறதையும் எம் திருமறை பலமாகக் கண்டித்து ஹஸ்ரத் மரியம் பீவி யவர்களின் கற்பு நிலையையும் பதிவிரதா தர்மத்தையும் உலகத்தாருக்கு எண்பிப்பதில் மிகுந்த பிரயாசை எடுத்திருக்கிறது. இன்று ஹஸ்ரத் மரியம் ஹஸ்ரத் ஈஸா (அலை) இவர்களின் பரிசுத்தத்தன்மையை உலகத்துக்கு அழுத்தமாக எண்பிக்கக்கூடிய ஓர் வேதம் இருந்தால் அது எம் சங்கை தங்கிய குர்ஆன் ஷரீபேயாகும். யூதர்களின் துஷ்டத்தனமான பழிமொழிகளை தலையெடுக்கவொட்டாமல் நசுக்கி கிறிஸ்தவர்களின் சந்தேகத்தையும் தெளிந்து ஹஸ்ரத் மரியம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் தூய்மையை மிக தைரியத்துடன் ஸ்தாபித்து கிறிஸ்தவர்களுக்கு நிகர்காட்ட முடியாத பேருபகாரம் செய்ததற்கு அவர்கள் ஆயுள் முழுமையும் நன்றியறியக் கடமைப்பட்டிருக்க; உங்கள் நபியைவிட எங்கள் இயேசுநாதர் சிறந்தவரல்லவாவென வாதுக்கழைப்பது உலகத்தில் இது ஓர் பெரும் புதுமை யென்றே தோன்றும். ஹஸ்ரத் மரியமின் மீதுள்ள பொய்ப்பழிமொழிகளை யகற்றுவான் வேண்டி எம் திருமறை அவர்களை அதி சிலாக்யமாகப் புகழ்ந்து கூறுகிறதை கிறிஸ்தவர்கள் சமரசமான எண்ணத்துடன் சிந்திக்கக்கடவர். இறைவனின் தத்துவத்தை வெளியிடவும் ஹஸ்ரத் மரியமின் தூய்மையை எண்பிக்கவுமே இவ் வதிசயம் நிகழ்ந்துள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் அவர்களின் மகிமைக்கு இதுமட்டும் காரணமாகாது. எம் நபி திலகம் அவர்களின் மாதாவைப்பற்றி சந்தேகம் ஏற்படாமலிருக்கும்போது குர்ஆனில் அதைப்பற்றிக் கூறும் அவசியம் ஏற்

படவில்லை. இயேசுநாதரின் ஜனனத்தின்போது தேவதூதர் முன்னுரை செப்பியதையும் ஓர் பெருமையெனக் கூறுவது கிறிஸ்தவர்களின் அறியாமையாகும். அநேகருக்கு இவ்வாறு முன்னறிக்கை ஏற்படலாம். ஹஸ்ரத் ஸகரிய்யா நபியவர்கள் கிழப்பருவமெய்தியும் அவர்களது மனைவி மலடியாக யிருந்து நம்பிக்கை இழந்துவிட்டபின் அவர்களுக்கு முன்னறிக்கை செய்யப்பட்டு ஹஸ்ரத் எஹ்யா (அலை) ஜனனமானார்களென எம் திருமறை கூறுகிறது. இதனால் இவர்கள் எல்லோரையும்விட சிரேஷ்டர்களென கிறிஸ்தவர்கள் கூறுவார்கள் போலும்? இன்னும் எங்கள் நபியவர்களின் மாதாவும் தங்கள் அருமை மைந்தரின் பிறப்பைக்குறித்த பல அதிசய சம்பவங்கள் நிகழ்வுற்றதை தெரிசித்ததாகவும் ஆதாரம் உண்டு. தவிர, நபியவர்களைப்பற்றிய முன்னறிக்கைகளை பேர்பெற்ற முந்தின தீர்க்கதரிசிகள் கொடுத்து வந்திருக்கிறதை திருக்குர்ஆனும் தற்காலத்திய பைபிலும் உறுதிப்படுத்துகின்றது. விசேஷமாக ஏசுநாதரவர்களே பிற்காலத்தில் அஹ்மது (பாரகலீத்) வருவாரென்றும் இன்னும் அவர்களது வருகையைக் குறித்து உபாகமம் 18–15 யோவான் 7-40-41 மத்தேயு 3-1-2 அப்போஸ்தலர் 3–22 யோவான் 16–12–15 இன்னும் இஞ்சீல் பர்ன பாஸில் பிற்காலத்தில் முஹம்மது வந்து என்மீதுள்ள பழியை நிவர்த்திப்பாரென பஹிரங்கமாக எழுதப்பட்டிருக்கிறது. (சேல் துரையின் குர்ஆன் மொழிபெயர்ப்பு.) இன்னும் அஸல் எபிரேயு பாஷையில் அச்சிடப்பட்ட பைபிலின் உன்னதப்பாட்டு அ. 5-10லிருந்து 16 வரை வசனங்களில் எங்கள் நபியவர்களின் குணாதிசயங்களைக் கூறிவந்து அவர் முஹமத்ஆக இருக்கிறார் என்று சிலாகித்துக் கூறப்பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசியல்லாத ஓர் ஸ்திரீயவர்களின் முன்னறிக்கையைவிட நபிமார்களில் சிரேஷ்டர்களால் ஒவ்வொரு கால

மும் எங்கள் அஹ்மது (பாரகலீத்) (அலை) அவர்களைப்பற்றி கொடுத்த முன்னறிக்கை ஆயிர மாயிரம் பங்கு அதிசிலாக்கியமும் மகிமையும் உள்ளதென கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ளக்கடவர். எங்கள் நபிபெருமானவர்களின் மாதாவின் ஈமானைக் குறித்து குர்ஆன் ஹதீதுகளில் பஹிரங்கமாய் ஒன்றும் சொல்லப்படவில்லையாயினும் அவ் வரபி குலமயில் லோக நாயகரை கற்பத்தில் கொண்டது முதல் ஈன்றெடுக்கும்வரைகண்ட அதிசயங்களால் அவர்களில் நிலைமை தெற்றென விளங்கலாகும். இவ்வாறு மதித்தற்கரிய கண்யமுடையோரும் தீர்க்கத் தரிசிகளை முடிவுக்குக் கொண்டு வந்து முத்திரை வைத்தவரும் உலகம் முடியும்வரை மாற்றப்படாத போதனைகளைப் பெற்றவரும் முந்தின தீர்க்கத் தரிசிகளால் ஆசீர்வதிக்கப்பெற்று முன்னறிக்கை சாற்றப் பெற்றவரும் குறைஷிக்குல திலகமுமான பெருமானவர்களை கற்பத்தில் கொண்ட பெருமையொன்றே அம் மங்கையர்க்கரசியின் மகத்துவத்தை விளக்கப் போதுமானது. எனவே ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களைவிட இறுதித் தூதரவர்கள் பலவழிகளிலும் சிரேஷ்டரென்பது பட்டப்பகல்போல திட்டமாய்விட்டது.

## வினா:- 3.

எங்கள் மஸீஹ் ஜனனமாகும் சமயம் பட்டுப்போன ஈத்தமரம் தழைத்து காய்த்தது. ஜலமில்லாதவிடத்தில் நீரூற்று சுரந்துவிட்டதுமான இப்படிப்பட்ட அதிசயம் உங்கள் நபியின் ஜனனத்தின்போது நிகழாததால் இவரே சிரேஷ்டராவர்.

## விடை:- 3.

ஹஸ்ரத் மாஸீஹ் (அலை) அவர்களின் ஜனனத்தின் போது மேற்கூறிய அற்புதம் நிகழ்ந்தது உண்மையே. எம்

திருமறை இதை உறுதிப்படுத்துகிறது. "பின்பு அவரை (மரியம்பீவியை) பிரசவ வாதனையாகிறது ஓர் பேரீச்சமரத்தின் அடியில் கொண்டுவந்தது. எவ்வாரேனும் இதற்கு முன்னதாகவே மரித்து பெயர் நாமமே இல்லாமல் மறந்து போயிருந்தால் (நலமாயிருக்குமென)" மரியம்பீவி கூறினர். பின்னர் அவருக்கு கீழிருந்து ஓர் சப்தம் வந்தது. கவலைப் படவேண்டாம். உனது ரக்ஷகன் உனக்குக் கீழே ஒரு நீரூற்றை ஓட்டியிருக்கிறுன். அன்றியும் தன் பக்கமாக பேரீச்சந்தருவின் அடியைப்பிடித்து அசையச் செய். இதனால் உன்பேரில் பழுத்த பேரீச்சம் பழம் உதிரும். இப்போது (அதில் நின்றும்) தின்று குடித்து கண்களை குளிர்ச்சிப்படுத்து. (சூராமரியம்)

இவ்வாக்கியத்தில் நின்றும் உனக்குக் கீழே ஓர் நீரூற்றை ஓட்டியிருக்கிறேனென்றும் மரத்தைப் பிடித்து அசைத்தால் பழுத்த பழம் உதிரும் என்றும் தெரிவித்த சுப சமாச்சாரத்தால் அச்சமயத்திலேயே நீரூற்றும் பட்டுப்போன மரத்தில் பழமும் உண்டானதென ஸ்பஷ்டமாக அறிகிறோம். இன்றேல் தன் பக்கத்திலிருக்கும் இவ்வஸ்துக்களை உபயோகிக்க ஓர் அசரீரிவாக்கு தேவைப்படாதென்பது பிரத்தியக்ஷப்பிரமாணம். ஹஸ்ரத் மரியம் (அலை) அவர்களின் பாதத்தின் கீழிருந்து தோன்றின குரல் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரவி) அவர்களின் சொற்படி ஹஸ்ரத் ஜிபுரீல் (அலை) அவர்களின் குரலாகும். கிறிஸ்தவர்கள் இதை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மேன்மைக்குக் காரணமெனக் கூறுவது அபத்தமாகும். இஃதோ இறைவன் தனது வல்லமையைக் காட்டுவதற்காகச் செய்த ஓர் அற்புதமாகும். இது அல்லாஹுத்த ஆலாவின் தத்துவத்தை வெளிப்படுத்துகிறதேயன்றி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மேன்மையைக் காட்டுவதல்ல. கிறிஸ்தவர்கள் இதன்

பேரில் பிடிவாதம் பண்ணுவார்களாயின் இதற்கு முன்னுள்ள தீர்க்கத்தரிசிகளின் அற்புதங்களால் அவர்களை எல்லோரையும்விட சிரேஷ்டர்களென கண்யப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். எங்கள் நபி திலகம் அவர்களின் ஜனனத்தின்போது அற்புதங்கள் நிகழவில்லையெனக் கூறுவது அறிவீனத்தைக் குறிப்பிடுவதாகும். ஹஸ்ரத் ஆமினு நாயகி நபிகட்கரசரை ஈன்றெடுக்கும் சமயம் பல அதிசயங்களைக் கண்ணுற்றிருக்கின்றனர். மேலும் கர்ப்பத்தின் போது முந்தின தீர்க்கத்தரிசிகள் கனவில்வந்து ஆமினுவே! உனது வயிற்றில் தரிபட்டிருக்கும் குழந்தை ஈருலக அதிபராவர். அவருக்கு முஹம்மது என்று நாமமிடுக. என்று சோபனச் செய்தி கூறிப்போந்தனர். இன்னும் அக்காலத்திலிருந்த அநேக சாஸ்திரிகளும் வேதக்காரர்களும் அரபியாவில் முன்னறிக்கை செய்யப்பட்ட நபி சமீபத்தில் உதையமாவரென்றும் இன்னும் பலர் கனவுகளில் இவ்வாறுசுவும் கண்டிருக்கின்றனர். இன்னும் எம் நபிகள்பிரானவர்கள் ஜனனமாக சுமார் 50 நாளைக்குமுன் நிகழ்ந்த ஓர் மகாபெரும் அற்புதத்தை அரபியாதேச வாசிகள் கண்கூடாகக் கண்டதையும் ஈண்டு குறிப்பிடுகிறோம்.

எமன் தேசத்தில் ஆட்சிபுரிந்துவந்த அப்ரஹா வென்னும் அரசன் திருமக்காவிலிருக்கும் கஃபத்துல்லா வென்னும் தேவாலயத்தை இடித்து நாசஞ்செய்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் யானைப் படைகளைத் திரட்டிக் கொண்டு மக்கமாநகரத்திற்குச் சமீபத்தில் வந்தான். அவ்வமயம் திடீரென வானலோகத்தில் சிறிய பக்ஷிகள் தோன்றி தங்கள் சொண்டுகளில் வைத்திருந்த கற்களால் அந்தச் சேனைகள்மீது எறிய அந்தச்சேனைகளெல்லாம் அப்படியே மாண்டு நாசமடைந்துவிட்டன. இவ்வதிசயத்தை எல்லோரும் கண்டதுமன்றி அக் கற்களில் சிலதை பொருக்

கியும் வைத்திருந்தார்கள். இவ் விஷயம் சூரத்துமீலில் வருகின்றது. எனவே, பட்டுப்போன மரம் காய்த்துப் பழுத்ததனுலும் நீரூற்று தோன்றிவிட்டதனுலும் ஹஸரத் மஸீஹ் மகா சிரேஷ்டரெனக் கருதுவதாயின் ஹஸரத் மஸீஹ் (அலை) முதலிய மற்றும் விசேஷ தீர்க்கத்தரிசிகளால் முன்னறிக்கை செய்யப்பட்டவர்களும் ஹஸரத் ஆமிஞ நாயகி யவர்களின் கெர்ப்பத்திலும் தீர்க்கத்தரிசிகளால் சுப செய்தி கூறப்பட்டவர்களும் வான சாஸ்திரிகள் வேதக்கா ரர்களால் எதிர்பார்க்கப்பட்டவர்களும் ஜனனத்தின்போது பல அற்புதங்கள் நிகழப்பெற்றவர்களுமான * நபிகதிலகம் லோகரக்ஷகர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்ல லமவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களைவிட அநேக மாயிரம் பங்கு சிரேஷ்டர்களெனக் கூறுவதில் கிறிஸ்தவர் களுக்கு யாது தடையுண்டெனக் கேட்கிறேம்.

## விஞ:- 4.

ஹஸ்ரத் மஸீஹ் தொட்டிலிலிருக்கும்போதே ஜனங்க ளுடன் வசனித்ததாகவும் இன்னும் அதே பருவத்தில் வேதமும் நபிப்பட்டமும் கிடைத்துக்கொண்டதாகவும் உங் களது வேதமே சாக்ஷிபகர்வதால் இவர் எல்லா தீர்க்கத் தரிசிகளைவிடவும் மேலானவரன்ருே?

## விடை:- 4.

பாதிரியாருக்கு மேன்மை தாழ்மை இன்னதென விளங்காக் குறையே இங்ஙனம் கூறத் தூண்டிற்றென்றறிகி ரேம். ஒருவரை மேன்மை யென்ருல் அவரது அற்புதங் களுடன் அவரால் இறைவனின் சிருஷ்டிகளுக்கு எத்துணை நன்மை கிடைத்திருக்கிறது. அவரின் போதனையால் சன் மார்க்கம் எவ்வளவுதூரம் பரவியிருக்கிறது என்ற விஷயங்

* விடை 1-ல் பார்வையிடவும்.

களேயும் எடுத்துக்காட்டவேண்டும். இதனை விட்டு விட்டு இறைவனின் தத்துவம் வெளிப்படும்போதெல்லாம் எங்கள் இயேசுநாதர் சிறந்தவரல்லவாவெனத் தள்ளல் அறிஞர்க் குரியதாகாதென்பது வெளிப்படை. இவ்வித அற்புதங்க ளால்மட்டும் ஒருவரை சிறந்தவரெனக் கூறும்பக்ஷம் இதை விட விசேஷமான அதிசயங்கள் முந்தின நபிமார்களாலும் விசேஷமாக இகலோகவள்ளல் எம்பெருமானவர்களாலும் அவர்களின் சிஷ்ய பக்தர்களாலும் எண்ணிறந்த அற்புதங் கள் செய்து காட்டப்பட்டிருக்கின்றன. இப்போது பாதிரி யாரின் உரைக்கல்லின்படி இயேசுநாதரைவிட எம் பெருமா னவர்களே மிக்க மேன்மையானவரென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஸ்திரப்பட்டுவிட்டது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) நபியவர்களின் மாதா மரியம் (அலை) அவர்கள் மீதுள்ள பழிமொழிகளை நிவர்த்தித்து இறைவனின் தத்துவத்தை உணர்த்துவதற்கே பாலகனை ஹஸ்ரத் ஈஸா நபியவர்களை வசனிக்கச் செய்தான். இதன் வரலாராவது:—

ஹஸ்ரத் மரியம் (அலை) பிதாவன்றி ஜனனமான நபியவர் களை எடுத்துக்கொண்டு ஜனங்களிடை வந்த போழ்து யூதர் கள் அவர்களை நிந்தித்து ஏ மரியமே! ஈதென்ன கொடுமை செய்தனை ஏ! ஹாரூனின் சகோதரியே நினது மாதா பிதா இப்படிப்பட்ட துர்நடத்தையுள்ளவர்களல்லவே பின்னைஎன் இப்படிப்பட்ட ஆபாசவேலையிலீடுபட்டனை, சொல், குழந் தையின் தந்தை யார்? என நிர்ப்பந்தித்தபோது அம் மாத ரசி இப் பாலகனிடம் கேட்டுக்கொள்ளுங்களென சமிக்கை செய்தனர். இதைச் செவியுற்றோர் இந் நங்கை நம்மை பரி கசிக்கிறார். நாற்பது நாள் குழந்தை எங்ஙனம் வார்த்தை யாடும் என பேசிக்கொண்டபோது பாலகனை நபியவர்கள்

எல்லீரும் கேட்கும் வண்ணம் வாய்திறந்து "நான் அல்லாவின் அடிமையாயிருக்கிறேன். எனக்கு அவன் வேதத்தையளித்து பின்னர் நபியாகவும் ஆக்கினன். அன்றி நான் எங்கிருந்தபோதிலும் என்னை மாராயமுடையவனுகச் செய்தான். இன்னும் நான் ஜீவித்திருக்கும்வரை தொழும்படியும், ஸகாத் கொடுக்கும்படியும் கண்டிப்பாய் விதித்ததுமன்றி எனது மாதாவுக்கு நன்றிபாராட்டுகிறவனுகவும் செய்தான். இன்னும் என்னை அதிகாரம் தூரதிருஷ்டமுள்ளவனுகச் செய்யவில்லை. இன்னும் நான் பிறந்த தினமும் மரிக்கும் தினமும் மறுமுறை உயிர்த்தெழும்பி நிற்கும் தினமும் என் மீது சோபனம் உண்டாயிருக்கிறது" என மொழிந்தார்கள்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் பாலுண்ணும் குழந்தைப் பருவத்தில் வசனித்த இவ்வாக்கியங்களில் அநேக ஆழ்ந்த கருத்துக்களமைந்திருக்கின்றன.

சாதாரண உலக இயற்கைக்குமாற்றமாக ஒரு சிறிதும் நடைபெருதென நம்பிக் கெட்டுப்போன பலாசிபர் தஹ்ரியர் ஸயன்ஸ்வாதிகளின் அடிப்படையான தப்பெண்ணத்தையொழித்து இறைவன் சகல தத்துவமுடையவன், சர்வாதிகாரன் அவன் தத்துவத்திற்குள் எல்லாம் அடங்கியுள்ளன. அதை அற்ப மதியினுல் நிராகரிப்பது அஞ்ஞான மடமையென நிரூபிப்பதும், வழிதவறிய இருட்கிடங்கில் வீழ்ந்து ஹஸ்ரத் மரியமின்மீது வியபிசாரமென்னும் பழிசுமத்தும் யூதர்களின் பொய்மொழிகளை அறத்தவிர்த்து ஹஸ்ரத் மரியம் (அலை) அவர்களின் கற்பிலக்கணத்தை ருஜூப்பிப்பதும், அதாவது "மொழியத்தரமற்ற ஓர் குழந்தை சர்வ சாதாரணமாய்ப் பேசி தமது மாதாவின் பதிவிரதா தர்மத்தை மெய்ப்பிக்கிறதால் இம் மாதரசியின்மீது சுமத்தும்

வீண் மொழிகள் கட்டுரையென உணர்த்துவதும், இவ்வாறு அதியற்புதமாக வார்த்தையாடும் குழந்தையை தேவனென்றும், தேவாவதாரமென்றும், தேவகுமாரனென்றும் ரப்புல் ஆலமீனாகிய சிருஷ்டிகர்த்தாவுடன் இணைவைக்கும் கிறிஸ்தவர்களுடைய ஷிர்க்கை தவிர்த்து நான் அடிமையென எண்பித்தலும் ஆகிய இவ்விஷயங்கள் இதிற் பொதிந்துள்ளன.

"எனக்கு வேதத்தை அளித்து நபியாகச்செய்தான்;" என்ற வாக்கியத்தில், இனி எனது பருவத்தில் எனக்கு வேதமளித்து ரசூலாக உங்களளவில் அனுப்புவது நிச்சயம் இது இறைவனின் நாட்டத்தில் முடிவாயிருக்கிறது; அது நடந்தேதீரும். அது நிச்சயிக்கப்பட்ட விஷயமென்பதை முன்னெச்சரிக்கையாக உங்களுக்கு அறிக்கைசெய்யும்படி எனது ரஹ்மானின் கட்டளைப்பிரகாரம இச் சிறுவயதில் நான் உங்களுக்கு அறிவிக்கிறேனென இறைவனின் தத்துவத்தை வெளியிடலும் அடங்கியிருக்கின்றன. எம் நபிகள் பிரானவர்கள் நான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப் படுவதற்கு முன்னமேயே நபியாகயிருக்கிறேனென அருளியதுபோல் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களும் கூறியிருக்கிறார்கள்.

இன்னும் "நான் எங்கிருந்தபோதிலும் என்னை மாராயமுடையவனாகச் செய்தா"னென்பதில்; நான்உலகத்திலிருக்கும் போதும் படைப்புகளுக்கு நன்மைதீமையை விபரித்து சோபனம் பெறுகிறவனென்றும், வானுலகத்திற்கு எடுத்துக்கொண்ட பின்னும் அமரர்களுடன் மாராயம் பெறுகிறவனென்றும் சமிக்ஞை காணப்படுகிறது.

இன்னும் "நான்ஜீவித்திருக்கும்வரை தொழும்படியும், ஸகாத் கொடுக்கும்படியும் கட்டளையிட்டா"னென்பதில் ஹஸ்ரத் ஈஸா (அலை) சதாவும் தொழுதுவணங்கி இறை

வனை ஸ்தோத்தரித்தலும் ஸகாத் என்னும் பதமானது ஆஸ்தியற்ற தங்கள் விஷயத்தில் பாவங்களைவிட்டு சுத்த மாக யிருக்கிறதும், தங்கள் உம்மத்திலுள்ள சீமான்கள்மீது ஏழைவரி கொடுப்பது அவசியமென்பதும் வெளியாகிறது.

இன்னும் "எனது மாதாவுக்கு நன்றிபாராட்டுகிறவனுகச் செய்தா"னென்பதில் எனது மாதாவை மட்டும் குறிப்பிட்டுக்கூறியதால் தந்தையன்றி இறைவனின் பரிசுத்தததத்துவ ஆவியால் நான் ஜனனமானேனென்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டுமென்பதும், "இன்னும் என்னை துரதிருஷ்டமுள்ளவனுக ஆக்கவில்லை" என்பதில் இறைவனுக்கும் அப்பால் எனது மாதாவுக்கும் ஊழியம் புரிகிறதைவிட்டும் நீங்கி, மற்றும் கடமைகளையும் சரிவர நடத்தாத கெர்விகள் மாராயமற்றவர்களைப்போன்று என்னை சிருஷ்டிக்கவில்லை யென்பதும் வெளியாகின்றது.

இன்னும் "நான் பிறந்ததினமும், மரிக்கும் தினமும் மறுமுறை உயிர்த்தெழும்பி நிற்கும் தினமும் என்மீது சோபனம்"என்பதில் என்னை சிறுமைப்படக்கூடிய எவ்வித ஆபத்துக்களை விட்டும் இறைவன் தன் கார்மானத்தில் வைத்துக்கொண்டானென்பது புலனுகிறது.

எம் நபிதிலகம் அவர்கள் "குழந்தை பிறக்கும்தருணம் ஷைத்தான் அக்குழந்தையின் விலாக்கொடியின்புரம் தனது விரலை யூன்றி அக்குழந்தையின் மீது தனது அதிகாரத்தைச் செலுத்துகிறுன். எனினும் ஈஸா (அலை) அவர்களை இறைவன் ஷைத்தானின் இத்தீங்கை விட்டும் கார்மானத்தில் வைத்திருக்கிறுன்" என்று அருளியிருக்கிறுர்கள். (ஸஹீஹ்முஸ்லிம்) ஷைத்தானின் இச்சிறிய தொந்தரவைவிட்டும் தப்புவித்து ஹஸரத் ஈஸா நபியவர்களை இறைவன் தன் கார்மானத்தில் வைத்துக்கொண்டபோது இவர்களைச் சிலு

வையிலறைபக் கொண்டுபோனதாகவும், சிலர் தூப்பிப்பரிசுசித்ததாகவும், சிலுவையிலறைந்ததாகவும் சொல்வது பகுத்தறிவுக்கு ஒரு சிறிதும் பொருந்தக்கூடியதல்லவென்பது வெளிப்படை. இன்னும் பாலுண்ணும் குழந்தைப் பருவத்தில் மூன்று குழந்தைகள் பேசியிருக்கின்றார்கள். அதிலொருவர் ஈஸாநபியவர்களாயிருக்கும் எனும் நாயகமவர்கள் அருளியதாக புகாரிஷரீபில் காணப்படுகிறது.

நாயகமவர்கள் தங்கள் விரலைச்சூப்பி ஹஸரத் ஈஸா (அலை) அவர்கள் பாலருந்திக்கொண்டிருந்த விதத்தைக் காட்டுவதைப் பார்த்தால் இப்போதும் நாயகமவர்களைப் பார்த்ததுபோலிருக்கிறதென்று ஹஸரத் அபூஹுறைறு (ரலி) கூறுகிறார்கள்.

இந்த நாயகவாக்கியத்தில் காணப்பட்டபடி பாலுண்ணும் பருவத்தில் வசனித்த மூவரில் ஹஸரத் ஈஸா (அலை) அவர்கள் நீங்கலாக மற்ற இருவர்களையும் கிறிஸ்தவர்கள் என்ன கூறுவார்களென்பது விளங்கவில்லை. அவர்களையும் உலக சிரேஷ்டரெனக் கூறின் ஹஸரத் ஈஸா (அலை) அவர்களும் சமமாகிறார்கள். இன்றென்றால் இவர்களையும் உலக சிரேஷ்டரல்லவென்பதை எற்றுக்கொள்ள வேண்டும். கண்களை மூடிக்கொண்டு ஒரே பிடிவாதமாகக் கூறுவது அறிஞர்கள் நகைக்கத்தக்க விஷயமாகும் என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

எனவே, மேற்கூறப்பட்ட இவ்விஷயங்களால் இறைவன் தனது அடியாள் மரியம்(அலை)அவர்கள் மீது சுமத்திய பழியை ரத்துச் செய்வதற்கு கொடுத்தருளிய ஓர் அற்புதமேயன்றி ஹஸரத் ஈஸா(அலை) அவர்களின் பெருமையைக் குறிப்பதற்காகவல்ல. இன்னும் கிறிஸ்தவர்கள் பிடிவாதம் பண்ணுவார்களாயின் இவர்கள் மூலமாக அற்புதங்கள்

வெளிப்படுவதால் கடவுளுக்கு நெருங்கியவர்களென்றும் தெரிந்துகொள்கிறோம்.

எம் நபிகள் பெருமானவர்கள் மூலமாய் இதைவிடச் சிறந்த அநேக அற்புதங்கள் நிகழ்ந்திருப்பதுடன் அவர்களின் போதனை முறையில் முன் வேதக்காரர்கள் முதல் விக்கிரக வணக்கஸ்தர் வரை சன்மார்க்க வழியடைந்து தௌஹீதென்னும் ஒரே கடவுள் பக்தராய் சிறந்து விளங்குவதால் இச்சிறப்புக்குறிய வள்ளலின் மஹோன்னதப் பதவியை எவரால் கணித்தல் சாலும்? ஹஸரத் ஈஸா நபியவர்கள் முதல் எல்லா தீர்க்கதரிசிகளையும்விட இவர்களே மிகக் கௌரவம் வாய்ந்தவர்களென்பது இன்னும் விளங்கவில்லையா?

## வினு:- 5.

குர்ஆன் வாக்கியப்படி பகைவர்களால் சூழப்பெற்ற ஈஸா நபியவர்களை கடவுளால் தேவதூதர்களைக் கொண்டு மானிட சரீரத்துடனே வானுலகத்திற் கழைக்கப்பட்டு விரோதிகளினின்றும் பாதுகாக்கப்பட்டிருக்கிறார். முஹம்மது (ஸல்) நபியை காபிர்கள் சூழ்ந்துகொண்ட சமயம் ஒரு தேவதூதரும் வரவுமில்லை. அவரை விண்ணுலகத்திற்கெடுத்துக்கொள்ளவுமில்லை. சாதாரண மனிதர்களைப்போல் பாதசாரியாக நடந்து ஓர் குகைக்குள் ஒளித்துக்கொண்டார். இப்புவியின்மீது தானுக ஒளித்துக்கொண்டவருக்கும் அமரர்களால் விண்ணுலகத்திற் கெடுத்துக்கொள்ளப் பட்டவருக்குமுள்ள வித்தியாசத்தைகவனிக்கும்போது இயேசுவே சிறந்தவரென்பது விளங்கவில்லையா?

## விடை:- 5.

ஹஸரத் ஈஸா நபியவர்களை வானுலகத்திற் கெடுத்துக் கொண்டதைக் குறித்து கிறிஸ்தவர், யூதர், முஹம்மதியர்

ஆகிய வேதக்காரர்களுள் பலத்த பேதகமிருந்துவருகிறது. கிறிஸ்தவர் குர்ஆனை ஒப்புக்கொண்டே எம்மீது ஆக்ஷேபஞ் செய்வதால் எம் திருமறை ஹஸரத் ஈஸா நபியவர்களைக் குறித்து என்ன தீர்ப்பளிக்கிறதென்பதைச் செவ்வனே விளக்கி இதரர்களின் விதண்டா வாதங்களை யொழிக்க வேண்டிய சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டுவிட்டது.

குர்ஆன் ஷரீப் ஷிர்க் முதலிய துர்க்கொள்கைகளை கடினமாகக் கண்டிக்கிறதாதலின் கிறிஸ்தவர்கள் ஏசுநாதர் மனிதர்களின் பாவநிவர்த்திக்காக சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார் என்ற பாபநிவர்த்திக் கொள்கையை அடியோடு ஒழித்து விடுவதில் சிலுவையிலறையப் படாமலே விண்ணுலகத் திற்கெடுத்துக் கொள்ளப்பட்டார்களென்ற திருமறை விதி பலத்த ஆதாரவளிக்கிறது. சிலுவையிலறையபடவில்லை என்பதை எண்பிக்குங்கால் பாபநிவர்த்திக் கொள்கை இருந்தவிடந்தெரியாமல் போய்விடுகிறது. கிறிஸ்தவர்களோடு மல்லாடி ஜெயிக்கப் பிறியமுடையோருக்கு முஸ்லிம்கள் சார்பாக ஓர் ஆயுதமிருக்குமாயின் இயேசுநாதர் அவர்களின் ஜீவிப்பு என்னும் பீரங்கியேயாம். இது கிறிஸ்தவர்களின் அடிமூடுகளைத்தகர்த்து அவர்களின் துர்க்கொள்கைகளை நாசமாக்கி விடுவதில் நிகரற்றதென்பது மிகையாகா. ஆதலின் குர்ஆனில் நின்றும் சிலுவையிலறையப்படாமல் விண்ணுலகத்திற்கேகி விட்டார்களென்பதை ஸ்தாபிப்போமாக.

ஹஸரத் ஈஸா நபியவர்கள் மீது பொறாமைகொண்ட யூதர்கள் அவர்களை எவ்வாறேனும் பிடித்துக் கொலைபுரிந்து விடவேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்களிருந்த கிரகத்தை இரவில் சூழ்ந்துகொண்டபோது ஹஸ்ரத் நபியவர்களை கர்த்தன் அப்படியே விண்ணுலகுக்கு எடுத்துக்கொண்டான்.

அவர்களை காட்டிக்கொடுக்க வந்த ஒருவனின் சொரூபம் நபியவர்களைப்போல் மாறிவிட்டதால் அவனையே இயேசுவென தீர்மானித்து சிலுவையிலறைந்து கொன்றூர்கள். சுவிசேஷங்களிலும் சற்று வித்தியாசத்துடன் "இவ்விதமாய் கர்த்தர் அவருடனே பேசினபின்பு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு" (மாற்கு 16. 19) என்ற வாக்கியமும் "அவர்களை ஆசிர்வதிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்." (லூகா 24. 51) என்ற வாக்கியமும் இயேசுநாதரை சிலுவையிலறையவில்லை யென்பதற்கு துணையாக நிற்கின்றன.

அன்றியும் புராதின கிறிஸ்தவர்களின் பெருங்கூட்டம் இக்கொள்கையுடனிருந்திருக்கின்றூர்கள்.

ஜார்ஜ் சேல்துரை தமது தர்ஜமா குர்ஆனின் "வமகரூ" என்ற ஆயத்தின்கீழ் எழுதுவதாவது "ஈஸா நபியவர்களை வானத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்டது. அவர்களின் சாயலான ஒருவனை சிலுவையிலறையப் பட்டதென்பது முஸ்லிம்களின் ஏகோபித்த கொள்கை. சில கிறிஸ்தவர் இக்கொள்கையை முஹம்மது (ஸல்) (இறைவன் காத்தருள வேண்டும்) தாஞக உண்டுபண்ணிவிட்டாரென்று நினைக்கின்றனர். ஆயினும் இன்னோர் நிச்சயமாக தப்பபிப்பிராயத்திலிருக்கின்றூர்கள். முஹம்மது நபியவர்கட்கு வெகு காலத்திற்கு முந்தின கிறிஸ்தவர்களில் அநேக வகுப்பார் இதே கொள்கையி லிருந்திருக்கின்றனர். உதாரணமாக கிறிஸ்து மதத்தில் ஆரப்பத்திலிருந்தே பே. ஸீ. லீ. டீன். என்ற வகுப்பார் மஸீஹ் (அலை) சிலுவையிலறையப்பட்டதை மறுத்து சாயிமன் என்ற ஒருவன் அவர்களுக்குப் பதிலாக சிலுவையிலறையப்பட்டான் என்று விஸ்வாசித்துக்கொண்டிருந்தனர். இவ்வாறே அதற்கு முன்னிருந்த

சிரன்தேன் என்ற வகுப்பாரும் இவ்வாறே விஸ்வாசித்திருந்தனர். இன்னும் மஸீஹ் (அலை) அவர்களை மனிதர்தான் என்று விஸ்வாஸிக்கும் கார்ப் பாகி ரீஷன் என்ற வகுப்பாரின் நம்பிக்கையும் "மஸீஹ் (அலை) சிலுவையிலறையப்படவில்லை அவர்களின் அநுசாரிகளில் நின்றும் அவர்களைப் போல் சொரூபமுள்ள ஒருவனே அறையப்பட்டான் என்பதேயாகும்." போட்டீஸ் உடைய ஆசிரியர்கூறுவதாவது:- நான் அப்போஸ்தலர்களின் நடத்தை யென்று ஓர் புத்தகத்தைப்படித்தேன். அதில் பேதுரு, யோவான் இந்தரியாஸ், தாமிஸ், போலுஸ் (பவுல்) ஆகியோரின் நடப்புகளை விபரிக்கப்பட்டிருந்ததில் மஸீஹ் (அலை) சிலுவையிலறையப்படவில்லை அவர்களுக்குப் பதிலாக வேறொருவன் அறையப்பட்டான். ஆதலின் தங்களையே சிலுவையிலறைந்ததாக நம்பிக்கொண்டிருந்த ஜனங்களின் மீது ஹஸரத் மஸீஹ் நகைத்தார்கள் என்பதும் ஒன்ருகும் என்பதே. இதற்குப் பின் சேல்துரை, பர்னபாஸ், உடைய சுவிசேஷத்தை நகல் செய்கிருர்கள். அதன் சுருக்கமாவது:- "யூதர்கள் ஹஸ்ரத் இயேசுவை பிடிக்க வந்தபோது நான்கு மலக்குகள் மூலமாக மூன்ருவது வானத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அவர்கள் கடைசி உலகஇறுதிவரை மரிக்கமாட்டார்கள். அவர்களுக்குப் பதிலாக யகூதாஸ்கிரியோத்தி சிலுவையிலறையப்பட்டான். நான் சிலுவையிலறை பட்டேனென்று என்னை நகைக்கப்பட்டது கவனித்துக்கொள். இப்பரிகாச நகைப்பு முஹம்மதுர் ரசூலுல்லா வருகிறவரை இருக்கும். அவர் வந்து ஒவ்வொருவனையும் இத்தப்பெண்ணத்தை விட்டும் அகற்றிவிடுவார்." (சேல் துரையின் குர்ஆன் மொழிபெயர்ப்பு)

இவ்விஷயங்களை ஆராயும்போது கிறிஸ்தவர்களின் புராதீன ஆச்சாரியர்கள் ஹஸ்ரத் மஸீஹ் சிலுவையிலறை

யப்படவில்லை வேறொருவன் அறையப் பட்டானென்பதை பஹிரங்கமாக அங்கிகரித்திருப்பதை யறிந்துகொள்கிறோம் எனினும் காலங்கள்தோறும் வேதசட்டத்தை மாற்றிப் புரட்டிவந்த கிறிஸ்தவர்கள் இதை மறைத்து வைத்தாலும் உண்மை மறைந்துவிடமாட்டாது. இவ்வாறான உண்மை யையே திருக் குர்ஆனும் உறுதிப்படுத்துகிறது.

இன்னும் பனீ இஸ்ராயீல்களை உன்னைவிட்டும் தடுத்துக்கொண்டபோது (ஜுஸ் 7. சூரா மாயிதா) இவ்வாயத்தில் இறைவன் ஈஸா (அலை) அவர்களை நோக்கி ஈஸாவே! பனீ இஸ்ராயில்களென்னும் யூதர்கள் உன்னை நெருங்குவதை விட்டும் தடுத்துக்கொண்டதை நினைத்துக்கொள்ளு மென்று தனது ரக்ஷிப்பைக் கூறுவதைக் கவனிக்கின் யூதர்கள் நபியவர்களை சிலுவையிலறைவ தொருபக்க மிருக்க சமீபத்தில் நெருங்கக்கூட இல்லை யென்பது சூரியனைப்போல் தெரியவருகிறது.

இன்னும் "அல்லாவுடைய ரசூலாயிருந்த மரியமின் மகனான ஈஸா மஸீஹை நாம் கொன்றுவிட்டோம்" என்று யூதர் சொன்னபோது இறைவன் அதை மறுத்து "அவரைக் கொல்லவுமில்லை, சிலுவையிலறையவுமில்லை, வேறொருவனை அந்த சொரூபத்திலாக்கப்பட்டது. இன்னும் எவர்கள் இவ்விஷயத்தில் பல்வேறு விதமாகப் பேசுகிறார்களோ அவர்கள் சந்தேகத்திலிருக்கிறார்கள். இதைப்பற்றி இவர்களுக்கு கொஞ்சமும் அறிவில்லை. மதிப்பைப் பின்பற்றுகிறார்கள். இன்னும் நிச்சயமாக அவரைக் கொல்லவில்லை, மேலும் அவரை அல்லா தன்னளவில் எடுத்துக்கொண்டான். அல்லாஹ் தத்துவமுடையவனும் ஆழிய அறிவுள்ளவனுமாயிருக்கிறான். இன்னும் வேதக்காரர்களின் கூட்டம் அவர் (ஈஸா) மரிக்கிறதற்கு முந்தி அவர்மீது ஈமான்கொள்வார்கள்" (ஜுஸ் 6 சூ. நிஸா.)

இவ்வாக்கியத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை யூதர்கள் கொன்றுபோட்டோ மென்பது முழுத்தவறு. அவரை சிலுவையிலறையவுமில்லை, கொல்லவுமில்லை. ஈஸா நபியவர்களைப்போல் ஆக்கப்பட்ட ஒருவனை சிலுவையில றைந்துகொன்று நபியவர்களை கொன்றுவிட்டதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். இவர்கள் மதிப்பாகச் சொல்கின்றார் களேயன்றி உண்மை அங்ஙனமல்ல நிச்சயமாக அல்லாஹ் அவரைத் தன்னளவில்* வானலோகத்துக் கழைத்துக்கொண்டான். பின்னர் கியாமத்தின்போது அவர் வானத்திலிருந்து இறங்குவார், அப்போதுள்ள யூத கிறிஸ்தவர்கள் அவர்மேல் விஸ்வாசங் கொள்வார்கள் என்ற விஷயத்தினால் ஹஸரத் நபியவர்கள் யூதர்களால் சிலுவையிலறையாமலும் கொல்லப்படாமலும் வானத்துச்கு உயர்த்திக்கொள்ளப்பட்டார்களென்பது பட்டப்பகல்போல் திட்டமாய்விட்டது.

---

* தன்னளவில் அழைத்துக்கொண்டானென்பதிற் இறைவன் ஒரே குறிப்பிட்ட விடத்திலிருந்துகொண்டு தன்பக்கத்தில் வைத்துக்கொண்டானென்பது கருத்தல்ல, இதை திருமறையும் ஆதரிக்கவில்லை. ஆதலின் தான் நாடின இடத்தில் வைத்துக் கரம்பற்றிக் கொண்டானென்பதே கருத்தாகும். இதற்கு விரோதமாக குதர்க்கம் செய்வது மடமையாகும். ஒருக்கால் அப்படி என் வானத்துக்கு உயர்த்தவேண்டும். பூமியில்வைத்துக் காப்பாற்றலாகாதா வென்ற கேள்விபிறக்கலாம். இறைவன் எந்தவிடத்தில் வைத்துக் காப்பாற்றினும் காப்பாற்றலாம். அதைக்குறித்து எவருக்கும் கேட்க அதிகாரமில்லை, மேலும் ஹஸரத் ஈஸாநபியவர்களை வானலோகத்தில் வைத்து காப்பாற்றப்பட்டதற்கும் எம்பெருமானவர்களை இப்புவியில் வைத்து ரக்ஷிக்கப்பட்டதற்கும் உள்ள வித்தியாசங்களையறிந்து எம்பெருமானவர்களின் மகாசிறந்த உயர்பதவியை கிறிஸ்தவர் உணரட்டுமென்ற ஓர் குறிப்புக்காக வென்பது புலனாகிறது.

யூதர்கள் மஸீஹ்(அலை) விஷயத்தில் சூழ்ச்சிசெய்தார்கள். அல்லாவும் சூழ்ச்சிசெய்தான். அல்லா சூழ்ச்சி செய்கிறவர்களைவிட மிகைத்தவன் (ஜுஸ் 3. ரு 13)

இவ்வாக்கியத்தில் அல்லாஹ் யூதர்களின் சூட்சியை பலிக்கவிடாமல் அவர்களைத் தட்டழியும்படி விட்டுவிட்டான். ஹஸ்ரத் ஈஸா(அலை) விண்ணுலகத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்டார்களென்பது ருஜுவாகிறது.

அல்லாவின் தந்திரம் ஈஸா நபியவர்களை வானத்தின் பேரில் எடுத்துக் கொண்டதாயிருந்தது. இன்னும் அவர்களை பிடித்துக்கொடுக்கவந்தவனை ஹஸரத் ஈஸா நபியவர்களின் சொரூபத்திலாக்கி விட்டான். ஆதலின் கொல்லப்பட்டவன் அவனே. (தப்ஸீர் கஷ்ஷாப்) இதேவிதமாக தப்ஸீர்ஜலாலைன், தப்ஸீர் அல்லாமா அபிஸ்ஸுவூத், தப்ஸீர் மதாரிக். தப்ஸீர் இப்னுகதீர், இதில் "இவ்வானதினால் அந்த மனிதனை நல்லவிதமாக தெரிந்துகொள்ள முடியாமற் ஈஸாவென்றே நினைத்துக்கொண்டார்கள். உண்மையில் ஈஸா (அலை-மை) அந்த கட்டிடத்தின் சாளரத்தின் வழியாக இறைவன் வானத்தில் எடுத்துக்கொண்டானென்றும்" தப்ஸீர் பைலாவி, தப்ஸீர் ரஹ்மானி, தப்ஸீர் பத்ஹுல் பயான், தப்ஸீர் முஆலிம், தப்ஸீர் சிராஜமுனீர், தப்ஸீர் பைஸீ, தப்ஸீர் காஸின், தப்ஸீர் அப்பாஸீ, தப்ஸீர் ஜாமிஉல்பயான், தப்ஸீர் கபீர், இமாம் பக்ருத்தீன் ராஸீ, முதலிய அரபிபாஷா நிபுணர்களின் வேதவியாக்கியானங்களில் அதிவியக்தமாய் கூறப்பட்டிருக்கிறது.

பேர்பெற்ற வியாக்யான கர்த்தாவான இமாம் பக்ருதீன் ராஸீ இவ்விஷயங்களை அதிவிளக்கமாக விளம்புவதாவது:—

"வமாகதலூஹு வமாஸலபூஹு" என்ற வசனத்தில் வேறொருவன் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. ஷுப்பிஹ என்ற விஷயமும் அவன்மீதே உறுதியடைகிறது. இதனால் (ஹஸரத் ஈஸா (அலை)மை) சிலுவையிலறையப்படவுமில்லை, கொல்லப்படவுமில்லையென்பது தெளிவாகிறது. (தப்ஸீர் இமாம் பகுருத்தீன் ராஸீ)

ஹஸரத் ஈஸாநபியவர்கள் முஅஜிஸா வென்னும் அற்புதம் காட்டியபொழுது யூதர்கள் அவர்களைக்கொல்ல நாடினார்கள். ஆயினும் இறைவன் அவர்களை அவர்களுக்கிடையில் நின்றும் மிகத்தெளிவாக வானத்தின்பேரில் எடுத்துக்கொண்டான். (தப்ஸீர் கபீர் இமாம் பகுருத்தீன்ராஸீ)

"ரபஉ" இந்த ஆயத்தைக்கொண்டு ஹஸ்ரத் ஈஸா நபியவர்களை வானத்தின்மீது எடுத்துக்கொண்டது ருஜுவாகிறது. (தப்ஸீர் கபீர் இமாம் ராஸீ)

"வகானல்லாஹு அஸீஸன்ஹகீமா" என்ற ஆயத்துக்கு கீழே எழுதுகிறார்கள். ஹஸரத் ஈஸா நபியவர்களை வானத்தின்மேல் எடுத்துக்கொள்கிறது மானிட சக்திக்கு உயர்ந்ததேயாயினும் எனது தத்துவத்திற்கும் அறிவிற்கும் ஒரு பிரமாண்டமல்ல. மேலும் இந்த ஆயத்து மிஃறாஜ் உடைய ஆயத்துக்கு உவமையாகிறது. (அதாவது மிஃறாஜிற்கு இப்பஞ்சபூத உடம்புடன் போவது ருஜுவாகிறது, சுருக்கம்) (தப்ஸீர் இமாம் ராஸீ)*

---

* நம் இஸ்லாம் மார்க்கத்திலும் கோணவழியின்மீது சென்று குதர்க்கம் செய்வோரும் தன் கக்ஷிக்காக உண்மையை மறைத்து பொய் பகர்வோரும் இல்லாமலில்லை. இமாம் பக்ருத்தீன் ராஸீ, தமது தப்ஸீரில் பலவிடங்களிலும் ஹஸரத் ஈஸாநபியவர்களை வானலோகத்துக்கு இப்பஞ்சபூத சரீரத்துடன் உயர்த்தப்பட்டதென்று ருஜுப்படுத்தியிருக்க "ரபஉ" என்னும் பதமானது அந்தஸ்த்தில்

மேலும் ரபஉ என்ற பதத்திற்கு மேன்மைப்படுத்தி அல்லது கனப்படுத்தி மரணிக்கச்செய்வது என்று அகராதிகளிலும் காணக்கிடைக்கவில்லை.

இன்னும் அரபிபாஷா நிபுணர்களும் இலக்கண இலக்கிய வித்வசிரோன்மணிகளும் மற்றும் கல்வல்லோரும் "ரபஉ" என்ற பதத்திற்கு உயரக்கிளப்புதல் என்றே பொருள் செய்கிறார்கள்.

ரபஉ, என்ற பதத்தின் அர்த்தம் உயரத்தில் எடுத்துக் கொள்வதாகும்: (ஸர்ராஹ், மிஸ்பாஹுல்முனீர், காமூஸ், அஸாஸுல் பிலாக்.)

"ரபஅஹு இலல்ஹாகிம்", சுல்தானிடம் அவனை அழைத்துக்கொண்டுபோனான். (பத்ஹுல் பாரிஷாஹ் ஸஹீஹ்புகாரீ வா. 9 ப. 431)

"ரபஅ ரஃஸஹு, இலஸ்ஸமாஇ" அவன் தனது சிரசை வானத்தின்புரம் உயர்த்தினான். (மிஷ்காத்துல் மஸாபீஹ் 176 ப.)

ரபஉ என்ற பதம் சரீரத்தைப்பற்றியவரை ஹக்கீகத்தான அர்த்தத்தின் சார்பாக அசைகிறதற்கும் இன்னும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகிறதற்கும் உப

---

உயர்த்துவதையோ அல்லது பெருமையில் உயர்த்துவதையோ குறிக்குமல்லாமல் ஓரிடத்தை விட்டு மற்றோரிடத்துக்கு உயர்த்துவதையேனும் ஒரு திசையிலிருந்து மற்றொரு திசையை நோக்கி உயர்த்துவதையேனும் குறிக்கமாட்டாது என்று தப்ஸீரே கபீரில் அம்மகா பெரிய வியாக்யான கர்த்தாவாகிய இமாம் பகுருத்தீன் ராஸீ அவர்கள் எழுதியிருக்கிறார்கள். (இயேசுவின் இரகசியம் 122 ப.) என்று வரைந்திருப்பது பெரும் புளுகாகத் தெரிகிறதுமன்றி இவ்வாறே மற்ற எல்லாவிடங்களிலும் கைவேலை நடந்திருக்குமென்பதும் அறியக்கிடக்கின்றது.

யோகப்படுகிறது. இரண்டாவது அர்த்தம் சந்தர்ப்பம் போல் கருத்துக்கொள்ளப்படும். (மிஸ்பாஹுல்முனீர்)

வரபஅ, அபவைஹி அலல்அர்ஷி (குர்ஆன்) தமது தாய் தந்தையரை சிம்மாசனத்தின் பேரில் ஏற்றிக்கொண்டார். வரபஅனுபௌக்கரு முத்தூர் (குர்ஆன்) (நாம் உங்களுக்குமேல் தூர் என்னும் பருவதத்தை உயர்த்தினோம்.)

இஃதேபோல் ரபஅ, என்ற பதமாகிறது உயரத்தில் எடுத்துக்கொள்வதென்று ஸஹீஹுல்புகாரி, மிஷ்காத்துல் மஸாபீஹ், ஸஹீஹுல் முஸ்லிம், ஷரஹ்மிஷ்காத், ஷைக் அப்துல்ஹக் (ரஹ்) மஜ்மஉல்பிஹார், மிஸ்பாஹுல் முனீர் முதலிய கிரந்தங்களிலும் இஃதேபோல் கீர்த்திவாய்ந்த தப்ஸீர்களாகிய தப்ஸீர் கபீர் இமாம் ராஸீ, முஆலிம், ஜலாலைன், சவாதிஹுல் இல்ஹாம், தப்ஸீர் ரஹ்மானி, பத்ஹுல்பயான், ஜாமிஉல் பயான் இப்னுகதீர், மதாரிக், துர்ர மன்தூர், பைழாவி, சிராஜுல் முனீர், காஸீன், கஷ்ஷாப், அபிஸ்ஸுஊத் அப்பாஸீ ஆகியவைகளிலும் ராபிஉக, ரபஉ, என்பதின் அர்த்தம் வானத்தளவில் உயர்த்தலென்று எழுதப்பட்டிருக்கிறது. *

---

* இஸ்லாத்தின் பூர்வ உண்மை நூலாசிரியரென்னும் பாஷா நிபுணர்களெல்லாம் "ரபஉ" என்னும் பதத்திற்குச் சரியான தாத்பரியம் உயரத்தில் எடுத்துக்கொள்ளுதல், வானத்துக்கு உயர்த்தல், எனமுடிவுகட்டியிருக்க, இவ்வாக்கியத்திலுள்ள ரபஉஎன்னும் பதத்துக்கு எல்லா வியாக்கியானிகளும் ஒரே மனதாய் "மேன்மைப்படுத்தல்" என்று பொருள் செய்திருக்கிறார்கள். (இயேசுவின் இரகசியம் 126 ப.) உலகந்தோன்றி இந்நாள்மட்டும் ஆண்டவன் தனக்கு அடிபணிந்து நடப்பவர்களை எப்பொழுதேனும் சங்லியால் ஏழாவது வானத்துக்கு உயர்த்தியதை யாரும் கண்டதில்லை, கேட்டதுமில்லை. அரபுப்பாஷையிலுள்ள சகல அகராதிகளையும் ஆராய்ச்சி

எனவே, திருக்குர்ஆனின் உண்மை கருத்தின்படியும் புராதீன கிறிஸ்தவக் கண்காணிகளோடு பைபலின் கருத்துப்படியும் ஹஸ்ரத் ஈசா நபியவர்களை யூதர்கள் சிலுவையி லறையவுமில்லை கொல்லவுமில்லை யென்பது பட்டப்பகல் போல் வெளியாகும்போது இயேசுநாதர் சிலுவையிலறையப்பட்டார் என்ற சாதாரண கிறிஸ்தவர்களின் நம்பிக்கை என்றகோட்டையின் நான்கு சுவர்களும் அடியோடு இடிந்து விழுந்துவிட்டன. இனி விரோதிகளின் கையினின்றும் வானலோகத்திற்கு உயர்த்திக் கொள்ளப் பட்டவருக்கும் விரோதிகளுக்கிடையே இப்புவியின்மீது வைத்துக் காப்பாற்றப்பட்டவருக்கும் பெரும் வித்தியாசமுண்டு. ஹஸரத் ஈசாநபியவர்களை விரோதிகள் சூழ்ந்து கொண்டபோது அவர்கள் கையில் சிக்காவண்ணம் அப்படியே வானுலகுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விரோதிகளால் பின் துயரவும் வேறுவித துன்பஞ்செய்யவும் அணுவேனும் வழியில்லாமற் போய்விட்டது. ஆனல் எம் நபிகள் திலகமோ விரோதிகளுக்கிடையிருந்தே வெளியேறினார்கள்

---

செய்துபார்த்தபோதிலும் ரபஉ என்னும் பதத்துக்கு இப்படிப்பட்ட பொருள் செய்யப்பட்டிருப்பதாய் ஒரு குறிப்பும் காணப்படவில்லை. (இயேசுவின் இரகசியம் 132 ப.) எனக்கூறுவதைப்பார்க்க புளுகுகளுக்கெல்லாம் நிகரற்றஅண்டப்புளுகு இதைவிட வேறில்லை,யென்பதைப் பாமரர்முதல் அறிந்துகொள்வது கஷ்டமாகாது. மேலும் சங்கிலியால் உயர்த்த யாரும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. யென்று பகர்வதை நோக்கின் இறைவன் யாரையும் உயர்த்துவதாயின் சங்கிலியைக் கொண்டுதான் உயர்த்தவேண்டும் போலும்? இதைக் கவனிக்கின் இவ்வழிகெட்ட வர்க்கத்தாருக்கு இறைவன் பூரண தத்துவமுடையவன் நாடினபடி எல்லாம் செய்யும் வல்லமையுள்ளவன் என்னும் விஸ்வாசம் இழந்து நாஸ்திக விஸ்வாசம் மேலிட்டிருப்பதாகத் தோன்றுவதால் குறும்பும் பரிகாசமும் சேஷ்டையுமான விஷயம் அவர்களில் நின்றும் வெளிவர ஆரம்பமாய்விட்டது.

விரோதிகளுக்கிடையிலே மலைப்பொதும்புக்குள் வைத்துக் காப்பாற்றப்பட்டவர்கள். எதுவரையெனின் விரோதிகள் சமீபத்தில் நிற்பதும் பேசுவதும் கேட்கக்கூடியதாயிருந்தது. அவ்வமயம் அவர்கள் எது வேண்டுமோனாலும் செய்யலாமென்றிருந்தும் அவர்களால் எதுவும் செய்துவிட முடியவில்லை. மேலும் அவ்விரோதிகளையெல்லாம் வென்று அடக்கியரசாண்டு ஜெயசீலரென வெற்றிமாலை சூடிய இவ்விஷயங்களே அவர்களின் மகிமை பிரதாபங்களை விளக்கப்போதுமானது. ஹஸ்ரத் ஈஸா நபியவர்களோ விரோதிகளை அடக்கி யரசாள முடியாது விண்ணுலகத்துக்கு ஏற்றிக் கொள்ளப்பட்டார்கள்.

எனவே பகைவர்களை விட்டு விண்ணுலகத்தில் வைத்துக் காப்பாற்றுவதைவிட பகைவர்களின் கைவசத்தில் வைத்துக்காப்பாற்றுவதே சிறந்ததும் புதுமையும்அதிவிசேஷமுமெனத் தெரிவதால் இவ்வற்புதத்திலும் எம் நபிகட்கரசரே அதிசிரேஷ்டரென்பது மிகத்தெளிவாக ஏற்படுகிறது. என்னே சிறந்த மகிமை!

## வினா:- 6.

உங்களது குர்ஆனின் போதனையின்படி "ஈஸா நபியவர்கள் இதர மானிட வர்க்கத்தாரைப்போல் உண்பதும் குடிப்பதுமில்லாமலே இப்பூத உடம்புடன் ஜீவித்திருக்கிறார். மேலும் அவரது சரீரம் எவ்வித இயற்கை மாறுதலடையவுமில்லை. மற்றும் நபிமார்களுக்கெல்லாம் இவ்வற்புதங்கொடாமல் ஈஸா நபியவர்கட்கு மட்டும் கொடுப்பதாயின் அவரது கௌரவத்திற்கும் பெருமைக்கும் இதுவே ஓர் அத்தாக்ஷியாகும். எனவே, உங்களது முஹம்மது நபியவர்கள் முதல் சர்வ நபிமார்களைவிடவும் இயேசுநாதர் மகா

உச்சஸ்தானத்தை யுடையவரென்பது இதனால் விளங்க வில்லையா?"

## விடை:- 6.

அற்புதங்கள் காணுந்தோறெல்லாம் பாதிரியாருக்கு ஓர் மயக்கமே ஏற்படுகிறது. அதன் உண்மை தாத்பரியங் களைச் சிந்திக்காது எங்கள் மஸீஹ் மேலல்லவா? என்ற இராகமே பாடுகின்றனர். இயேசுநாதரவர்களை வானத்தில் வைத்திருப்பதால் அதர்க்குத் தக்கவிதமாகத்தானே அமை த்துவைப்பான். வானுலகத்திலுள்ள அமரர்களுடனிருப் பதால் அவர்கட்கு ஊண், தீன், குடிப்பு முதலிய மானிடர் களுக்குள்ள அவசியம் ஏற்படாதென்பதை பாதிரியார் அறிந்துகொள்ளாமற் போனது விந்தையே * வானத்தி லுள்ள அமரர்கள் ஊண் குடிப்பின்றி மாறுதலில்லாமலும் கல்லுக்குள்ளிருக்கும் தேரை அற்புதமாய் ஜீவித்திருப்ப தையும் பாதிரியார் சிந்தித்தால் இவர்களையும் விசேஷ சிறப்புடையவரெனக் கூறுவார்போலும்? ஹஸரத் இப்ரு ஹீம்(அலை) இவ்வுலகத்தில் நம்றூ தென்னும் கொடிய பாவி யால் நெருப்புக்குழியில் தள்ளி எரிக்கப்பட்டும் யாதொரு மாறுதலும் பேதகமுமன்றி சந்தோஷமாக வெளியேறினது

---

* யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களையும் பலாவி யர்களையும் பின்பற்றி ஓர் நடுவழியைக் கண்டுபிடித்ததாகக் கூறிக் கொள்ளும் ஒரு சில குதர்க்கவாதிகள் வேதத்திற்கு மாற்றமானதும் நியாயத்திற்கு விரோதமானதுமான விதண்டாவாதம் புரியத்தலைப் பட்டு ஹஸ்ரத் ஈஸாநபியவர்களின் மரணத்தை ஸ்தாபிக்க முயற் சிக்கின்றனர். நபிகள் சிகாமணியவர்கள்முதல் ஸஹாபாக்கள், இமாம்கள், வலிமார்கள் முதலிய யாவரையும் இதர மதஸ்தர்களால் பரிகசிக்கச்செய்வதற்கு இதைவிட வேறொரு விஷயம் தேவை இல்லை.

மஸீஹ் வானத்தில் மாறுதலின்றி ஜீவித்திருப்பதைவிடச் சிறந்ததல்லவா? உலக சிருஷ்டியின் அற்பப் பொருள்களான சூரியன், சந்திரன் ஆரம்ப காலத்திலிருந்து யாதொருமாறு

---

குதர்க்க வினு (1) ஈஸாநபியவர்கள் நூற்றிருபது வருஷமே உயிரோடிருந்தார்கள் (திப்ரானி, ஹஜ்ஜுல் கராமா, முஸ்தத்ரிக் ஹாகிம்,) ஸர்க்கானி, ஆதலின் நூற்றிருபது வயதுசென்று மாண மானுர்களென்று துலங்குகிறது.

விடை (1) இது ஒப்பத்தக்கதல்ல. நன்மதிப்புப்பெற்ற உண்மையான ஹதீதுகளில் 33 வயதில் வானுலகத்துக்கு உயர்த்திக் கொள்ளப்பட்டதென நிச்சயிக்கப்பட்டிருக்கிறபோது நம்பிக்கையிழந்த ஹதீதுகளை ஆதாரவுக்கு காட்டுகிறது முரட்டு வாதமேயன்றி முஹத்திதீன்களின் சட்டப்படி உபயோகிக்கப்பட்டதல்ல. ஹஸ்ரத் மூஸாநபி யவர்கட்கு 120 வயதென பைபல் உபாகமம் 34. 7, லும் அஹ்ஸனுத் தபாவீர் சூரா மரியமிலும் வருகிறதைப்பின்பற்றி சிலர் ஹஸ்ரத் ஈஸாநபியென நினைத்து தவறுதலாய் சில நூற்களில் வரைந்துவிட்டார்கள், ஆதலின் இது உண்மையல்ல.

(1) உங்களால் காட்டப்பட்ட ஹஜ்ஜுல் கராமா ஆசிரியரே அதற்கு மாறுக தீர்மானித்திருப்பதைக் கேளுங்கள்.

ஹஸ்ரத் ஈஸாவை உயர்த்தப்படும்போது உண்மையான ஹதீதில் சொல்லப்பட்டபடி 33 வயதுடையவர்களாக இருந்தார்கள். (தப்ஸீர் தர்ஜுமான் வ இன் மின் அஹ்லில்)

(2) ஹதீது, அந்த உம்மத் ஒருபோதும் தவறிப்போகமாட்டார்கள். அதற்கு முதலில் நானும், மத்தியில் மஹ்தியும், இறுதியில் ஈஸா (அலை) வுமாக, இருக்கிறோம். (ஹஜ்ஜுல் கராமா 384).

(3) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறங்குவது மஹ்தீ (அலை) அவர்களின் காலத்திலாயிருக்கும் உம்மத்துகளின் ஏகோபித்த கொள்கைப்படி திமஷ்கின் கீழ்ப்பாகத்திலுள்ள வெள்ளை மினாராவின் பேரிலாயிருக்கும். அந்நேரம் முஸல்மான்கள் அஸர் தொழுகைக்கு ஆயத்தமாயிருப்பார்கள். இமாம் மஹ்தீ பின்னுக்கு விலகுவார்கள். ஆயினும் ஹஸரத் ஈஸா (அலை) ஹஸ்ரத் மஹ்தீ

தலடையாமல் இருந்து வருவது முதலியன இறைவனின் தத்துவத்தை வெளிப்படுத்துகிறதே யல்லாது வஸ்துக்களின் மேன்மையைக் குறிப்பதல்ல. மனித இயற்கைக்கு

---

(அலை)க்குப் பின்னுலே நின்று தொழுகையை நிறைவேற்றுவார்கள். (ஹஜ்ஜஜுல் கராமா 384).

(4) ஹஸ்ரத் ஈஸா(அலை) இறங்கினதற்குப் பின் ஷரீஅத்தெ முஹம்மதியாவின் பேரில் நடப்பார்கள். மாற்றப்பட்ட ஷரீஅத்தின் பேரில் நடக்கமாட்டார்கள் அப்படி நடக்கும்படி ஏவவுமாட்டார்கள். (ஹஜ்ஜஜுல் கராமா 425).

(5) தஜ்ஜாலை சிரச்சேதம் செய்தபின் ஹஸ்ரத் இமாம் மஹ்தீயும் ஈஸா (அலை) அவர்களும் தேச சஞ்சாரம் செய்து தஜ்ஜால் மூலம் கஷ்டம் ஏற்பட்டவர்கட்கு சாந்திகூறி அவர்களின் நஷ்டத்திற்கு உபகாரம் புரிந்து அவர்களின் உயர்பதவியை விபரிப்பார்கள் (ஹஜ்ஜஜுல் கராமா 434 ப.)

ஆகவே இவ்வாதாரங்களைக்கொண்டு ஹஜ்ஜஜுல் கராமாவின் ஆசிரியரும் ஸர்க்கானியும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கட்கு 120 வயதென்பதை மறுத்து வானுலகத்திலிருந்து பின்னுக்கு வருவார்களென்பதை தெளிவாக விளக்குவதனுல் முந்தின விஷயம் நம்பிக்கைஇழந்தது எனப் பஹிரங்கமாய் விட்டது. ஸர்க்கானி தமது ஷரஹ் மவாஹிபில் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களின் மரணம் மதீனுவில் ஆகுமென்றும் அதேவிடத்தில் அவர்களின் ஜனுஸாவைத் தொழவைத்து நாயகம் அவர்களின் சமீபத்தில் அடக்கப்படுவார்களென்றும் கூறுவதனுல் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களுக்கு 120 வயதென்பது ஒப்புக்கொள்ளத்தகாத பொக்கட்டு என்பது அவர்களாலேயே ருஜுவாய்விட்டது.

இனி திப்ரானி, முஸத்துரிக்ஹாகிமைப்பற்றி விசாரிப்போம். இவ்விருவரின் நூற்களில் 120 வயதென்று சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய ஆதாரத்திற்குறிய ராவிகளின் சனதுகளை அறிவிக்கப்படவில்லை. சனதே அறிவிக்கப்படாத ஹதீது ஆதாரமாகாதென்பது ஹதீதையுடைய இமாம்களின் தீர்மானம்.

மாற்றமாக நபிமார்கட்குப் பல அதிசயங்களை இறைவன் அருளியிருப்பது போல் ஹஸ்ரத் மஸீஹுக்கும் அளித்திருக்கிறான். இவ்வற்புதங்களால் இதர நபிமார்களை விசேஷ

---

சனதென்பது என்ன? நான் ஹதீதை இன்னவரிடத்தில் கேட்டேன். அவர்இன்னவரிடம் அவர்இன்னவரிடம் என்று நபித் திலகம் அவர்கள் வரையில் போய்ச்சேர்ப்பதாகும். இவ்வாறு சேர்த்தபின் ராவிகளின் யோக்யாம்சங்களைப்பற்றி ஆராய்ச்சியிடப்படும். ஆதலின் திப்ரானி முஸத்ரிக், ஹாகிமில் வருகிறது என வாதிக்கிறவர்கள் இவ்வித சனதை காட்டட்டும். பின்னர் நாம் அதை ஆராய்வோம். உதாரணத்திற்காக நாம் ஒரு ஹதீதை காட்டுகிறோம் அபூபக்கரிபுனு அபித்துன்யா சொன்னார். நமக்கு காசிமிப்னு ஹாஷிம் ஹதீதை அறிவித்தார். அவருக்கு ஸப்வானிபுனு ஸாலிஹ் அறிவித்தார். அவருக்கு ரவாதிபுனுல் ஜராஹுல் அஸ்கலானி அறிவித்தார். அவருக்கு அவ்ஸாஹி ஹாரூனிபுனு தாபைக்கொண்டும், அவருக்கு அனஸ் (ரலி) அவர்களைக்கொண்டும் அறிவிக்கப்பட்டதாக முடிவெய்துகிறது. ஹஸாத் அனஸ்(ரலி) அவர்கள் நாயகம் சொன்னதாகச் சொன்னார்கள்.

சுவர்க்கவாதிகள் சுவர்க்கத்தில் எப்பேர்ப்பட்ட நிலைமையில் நுழைவார்களானால் அவர்களின் உயரம் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களைப்போலும் அவர்களின் அழகு ஹஸ்ரத் யூசுப் (அலை) அவர்களைப்போலும் அவர்களின் வயது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப்போல் முப்பத்து மூன்று ஆகவுமிருக்கும். (தப்ஸீர் இப்னு கதீர் மிஸ்ரி வால் 9 ப. 380).

ஆதலின் சனது இல்லாததும் நம்பிக்கை இழந்ததுமான ஹதீதுகளைத் தள்ளி உறுதியானதும் சனதுள்ளதுமான ஹதீன்படி ஹஸ்ரத் ஈஸா அவர்கள் வானலோகத்தில் 33-வது வயதில் உயர்த்திக்கொள்ளப்பட்டார்கள் என்பது சூரியனைப்போல் **பிரகாசமாய்** விட்டது.

**குதர்க்க வினா 2:-** ஹதீது நாயகம் திருவுளமானார்கள் மூஸாவும் ஈஸாவும் ஜீவித்திருந்தால் என்னைப்பின்பற்றுவார்கள். (தப்ஸீர்

சிறப்புடையவர்களெனக் கருதாமலிருக்கும்போது இயேசு நாதரை மட்டும் விசேஷ சிறப்புடையவரெனக் கருதுவது

இப்னுகதீர் தர்ஜுமானுல் குர்ஆன், அல்யவாகீத் ஷாரஹ் மவாஹிப் ஸர்க்கானி) ஆதலின் ஹஸ்ரத் மூஸா(அலை)அவர்களுடன் ஹஸ்ரத் ஈஸா (அலை) மரணமாய் விட்டதாக ருஜூவாகிறது.

நியாய விடை (2) இவ்விஷயம் ஹதீதுகளின்மீது ஆராய்ச்சி யில்லாததனால் எற்பட்ட பெருந் தவறேயன்றி வேறல்ல. ஹதீதில் மூஸா ஜீவித்திருந்தால் என்று மட்டுமே வந்திருக்கிறது.

(1) முஸ்னத் அஹமத் வா. 3 ப. 387, மிஷ்காதுல் மஸாபீஹ் ப. 30,மிர்காதுல் மபாதீஹ் வா. 1 ப. 206-207, அஷிஹ்ஹத்துல்லம் ஆத் வா. 1 ப. 155, மலாஹிருல் ஹக் வா. 1. ப. 89, ஆகிய இவை களில் எழுதியிருப்பதாவது:- நாயகமவர்களிலிருந்து ஹஸ்ரத்ஜாபிர் (ரலி) ரிவாயத்துச்செய்கிறதென்னவெனின் நாயகமவர்கள் சமூ கம் ஹஸ்ரத் உமர் இபுனு கத்தாப் (ரலி) அவர்கள் வந்து "நிச்சய மாக நாம் யூதர்களின் வாக்கியங்களைக் கேட்கிறோம் (அவை)நமக்கு அழகாயிருக்கின்றன. ஆதலின் அவைகளில் நின்றும் சிலதை எழுதட்டுமா? என விண்டபொழுது நாயகமவர்கள் கூறினதாவது என்ன? எகூதிநஸறுக்கள் மதிமயங்கினதுபோல் நீங்கள் மயங்குகி றீர்களா? நிச்சயமாக நான் உங்களிடத்தில் தெளிவான வெளிச் சத்தையுடைய ஷரீஅத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். இன்னும் மூஸா (அலை) ஜீவித்திருந்தாலும் அவர்களுக்கு என்னைத் துயர்வ தையன்றி வழி இல்லை என்பதே. இதை பைஹக்கி ஷுஅபுல் ஈமா னென்ற நூலிலும் விபரித்திருக்கிறார்கள்.

(2) சுனனெதாரமீ 62 ப. மிர்காத்துல் மபாத்தீஹ் வா. 1. ப. 214, 215, அஷிஹ்ஹத்துல்லம் ஆத் வா. 1 ப. 161, மலாஹிருல் ஹக் வா. 1 ப. 94 ஆகிய இக்கிரந்தங்களிலும் மூஸா (அலை) உயி ரோடிருந்து எனது நபிப்பட்டத்தைப் பெற்றால் நிச்சயமாக என் னைத்துயர்வார் என்ற நாயகவாக்கியமே காணப்படுகின்றன.

(3) ஐனீஷரஹ் புகாரி வா. 11 ப. 507, தலாயிலுன் நுபுவ் வத் வா.1 ப. 8, கஸாயிஸுல் குப்ரு வா. 2 ப. 187,ஆகிய நூற்களி லும் மூஸா என்ற வாக்கியமே ஹதீதில் காணப்படுகிறது.

உண்மையை உணரத் திறமையற்ற அந்தகாரமே யென நன்கு புலனுகிறது. எனவே, அற்புதங்களிலும் உலக சீர்

(4) தப்ஸீர் இப்னுகதீர் வா. 2 ப. 246, தர்ஜுமானுல் குர்ஆன் வா. 2 ப. 461, இவற்றில் எழுதியிருப்பதாவது அபூயஃலா ஜாபிர் (ரலி) அவர்களைக்கொண்டு ரிவாயத்துச் செய்கிறுர்கள். நாயகம் திருவுளமானுர்கள். வேதக்காரர்களிடத்தில் எதும் கேட்காதீர்கள். அவர்கள் தாங்களே வழிதவறிப் போயிருக்கும்போது உங்கட்கு அவர்கள் என்ன நேர்வழி காட்டப் போகிறுர்கள்; நீங்கள் ஒருக்கால் பொய்யை உண்மைப் படுத்துவீர்கள், அன்றேல் மெய்யைப் பொய்யாக்குவீர்கள். இறைவன்மீதாணையாக உண்மை எதுவெனின் மூஸா உங்கட்கிடையில் ஜீவித்திருந்தால் அவர்கட்கு என்னைப் பின்பற்றுவதையன்றி வேறு வழி இல்லை.

எனவே, தப்ஸீர் ஹதீதுகளுடைய மேற்சொல்லிய நூற்களிலுள்ள மர்பூஆன ரிவாயத்தில் மூஸாவென்ற வார்த்தையே வந்திருக்கின்றன. இதைப்பற்றி மர்பூஃ, முத்தஸில், ஆன ஹதீதுகளில் மூஸாவும் ஈஸாவும் என்று காணப்படவில்லை. சில நூற்களில் இரு நாமங்களும் சேர்த்துக் கூறப்பட்டிருக்கிறதென வம்பாக வாதாடும் பக்ஷம் அந்நூற்களில் காட்டப்பட்ட இரு நாமங்கட்கு மேற்கோள் காட்டப்படவில்லை யென்றும் பிற்காலத்தில் போர்ஜரியாகச் சேர்க்கப்பட்டுவிட்டதென்றும் கூறுவோம். ஆதலின், அது முஸ்லிம்களிடம் ஆதாரவிழந்ததென்பது வெளிப்படை.

(5) அல்யவாகிற் வல்ஜவாஹிர் (மிஸ்று, மைமனு அச்சுக்கூடம்) வா. 2 ப. 19, 20-ல் இமாம் ஷஅருனி ஷைக்இப்னு அரபியுடைய புதூஹாத் அதிகாரம் 10-ல் மூஸாவும் ஈஸாவும் என்று வருகிறதாக ஆதாரம் காட்டியுள்ளார்கள். ஆனல் புதூஹாத் முதல் வால்யம் 10-ம் அதிகாரம் 135-ம் பக்கத்தில் மூஸா என்று மட்டுமே எழுதப்பட்டிருக்கிறது. ஆதலின் அதை அச்சுப்பதிப்பித்த பஹாயிக்

திருத்தங்களிலும் நிகரற்று விளங்கும் நபிகள் நாயகமே எல்லோரையும்விடச் சிறந்தவர்களென தெள்ளிதில் விளங்குகிறது.

## வினா:- 7, 8.

எங்கள் இயேசுநாதர் செத்த பிரேதங்களுக்கு உயிர் கொடுத்து எழுப்பினுரென்றும் இன்னும் மண்ணைக்கொண்டு ஓர் பக்ஷியின் சொரூபம் செய்து அதில் உயிர்விட்டு பறக்கச் செய்தனரென்றும் இன்னும் பிறவிக் குருடர்களுக்கு கண் பார்வை யளித்தாரென்றும் செவிடர்களுக்கு கேட்கவைத்தாரென்றும் குஷ்டரோகிகளை தொட்டமாத்திரத்தில் சொஸ்தப்படுத்தினுரென்றும் உங்கள் குர்ஆன் கூறுகிறது. இவ்வாறு சிருஷ்டிக்கவும் குணப்படுத்தவும் செய்யும் தன்மையானது இறைவனுக்குச் சொந்தமென குர்ஆன் கூறுவதால் இத்தன்மை வாய்ந்த எங்கள் நாதர் இவ்வாறு செய்

---

கூட்டத்தார்களாவது அல்லது வேறு எவராவது பின்னுல் சேர்த்திருக்கிறுர்களென நிர்ச் சந்தேகமாய்த் தெரிந்துவிட்டது.

(6) ஹதீதின் தன்மைகளை ஆராய்ச்சியிடுவதில் அங்கீகரிக்கப்பட்ட அல்லாமா இபுனுஹஸம் உந்துலுஸீ, ஆகிறவர்கள் ஈஸா வென்ற வார்த்தையை நாயகம் அவர்கட்குப்பின் பொய்ஹதீதை உண்டுபண்ணும் (போலி) பொய்யர்கள் அதிகப்படுத்திவிட்டார்களெனக் கூறுகிருர்கள். (சாபிஉஷ்ஷஹபா ஹஸ்ரத் மௌல்வி முஹம்மது முஸ்லிம் தேவ்பந்தீ ப. 52. அஞ்சுமன் தாயீதுல் இஸ்லாம் லாகூர் 1925 ஆகஸ்டு 25. அஹ்லஹதீஸ் 28 ஸபர் 1344)

ஆகவே, மூஸாவென்ற வார்த்தையைத் தவிர ஈஸாவென்ற வார்த்தை பின்னுல் பொய்யர்களால் சேர்க்கப் பட்டிருக்கிறதென்பது நன்கு ருஜூவானபின் ஹஸரத் ஈஸா (அலை) வானத்தில் ஜடலத்துடன் ஜீவித்துக்கொண்டிருக் கிருர்களென்பது ஸ்திரப்பட்டுவிட்டது.

யாத உங்கள் முகம்மது நபியவர்களைவிட சிரேஷ்டரல்லவா? *

---

* சில குதர்க்கவாதிகள் ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் மரணித்து விட்டார்களென்றும் அவர்களில் நின்றும் அற்புத மகிமை வெளிப்படவில்லை யென்றும் வாதாட முன் வந்திருக்கின்றன ராதலின் அவர்களின் சந்தேகத்தை நிவர்த்திக்கப்படுகின்றது.

(1) வின:- மஜ்மஉல் பிஹார் என்னும் அகராதியின் ஆசிரியர் ஹஸ்ரத் ஈஸாநபியவர்கள் இறந்துபோனார்களென்று இமாம் மாலிக் (ரஹ்) கூறினதாக எழுதியிருக்கிறார்.

(1) விடை:- இது பெரும் புரட்டாகும். இமாம் மாலிக்(ரலி) அவ்வாறு விஸ்வாசித்ததாக தங்களது முவத்தாவென்னும் நூலில் எங்கேனும் கூறியிருப்பதுமில்லை. அவர்கள் சொன்னதாக அவர்களின் சிஷ்ர்களிலெவரேனும் எழுதியிருப்பதுமில்லை. அவர்களின் சிஷ்யர்கள் அவ்வாறு விஸ்வாசிப்பதுமில்லை. மேலும் இமாம் மாலிக் (ரலி) சொன்னதைக் கேட்டவரின் நாமத்தைத் துலக்கவுமில்லை. இதுதான் போகட்டும் ஹஸ்ரத் ஈஸா (அலை) இறந்துபோய்விட்டார்களென்று இமாம் மாலிக் சொன்னதாக எழுதிவைத்த மஜ்மஉல் பிஹார் எனும் நூலாசிரியராவது அதை அங்கீகரித்திருக்கின்றாராவெனின் அதுவுமில்லை. தவிர இந்த குதர்க்கவாதிகளில்மேற்கூறிய நூலிலிருந்து அதன் முழு வாசகங்களையும் விபரிக்கின்றார்களாவெனின் அப்படியுமல்ல. எனெனில் அதற்குக்கீழுள்ள வாசகங்களை எழுதுவார்களாயின் தங்களது கருத்துக்கு நேர் மாற்றமென அதை வெளியிடப் பயப்படுகிறார்கள்.

அந்த மஜ்மஉல் பிஹார் நூலின் முழு வாசகமாவது:- முஹம்மதிய ஷரீஅத்தின்படி தீர்ப்புச்செய்கிறவர் இறங்குவார். ஈஸா (அலை) மரிக்கவில்லை யென்பதே எல்லோரின் நம்பிக்கை. இன்னும் மாலிக் இறந்துபோனதாகச் சொன்னார். இன்னும் அவர் 33 வயதுடையவராயிருந்தார்- அல்லாஹ் அவரை வானத்தின் பக்கம் உண்மையாக உயர்த்திக்கொள்ள நாடினன். முத்தவாத்திரான ஹதீதுகளில் (சந்தேகமற்ற நிச்சயமான ஹதீதுகள்)வருவதுபோல் அவர் பிற்காலத்தில் வருவார்.

## விடை:- 7, 8.

கிறிஸ்தவர்களின் அறியாமைக்கு நாம் மிகவும் வருந்துகிறோம். எவ்விதத்திலும் ஆக்ஷேபித்துவிட வேண்டுமென்ற நோக்கமேயல்லாது முன் பின் விஷயங்களைச்சிறிது

---

இவ்வாசகத்திலிருந்து இமாம் மாலிக் சொன்னதாகவுமில்லை; மேலும் நூலாசிரியரே அதை ஒப்புக்கொள்ளாது ஹஸ்ரத் ஈஸா (அலை) 33 வயதில் உயர்த்தப்பட்டதாகவும் உண்மையான ஹதீதுகளின்படி பிற்காலத்தில் வருவார்களென்றும் குறிப்பிடுகிறார். ஆயினும் குதர்க்கவாதிகள் இம்மூவாசகங்களையும் நகல் செய்தால் நமக்குப் பிரதிகூலமாகுமெனக் கருதி மாலிக் என்ற ஒரு பதத்தை மட்டும் தூக்கிவைத்துக் கொண்டார்கள். இதிலிருந்து இவர்களின் வாக்கியங்கள் எத்துணை நம்பத்தக்கதென முஸ்லிம்கள் உணர்ந்து கொள்ளட்டும். மேலும் அந்த மாலிக் இன்ன மாலிக் என்பதும் விளங்கவில்லை. ஏனெனில் இபுனுஹஜர் அஸ்கலானி தங்களது தஹ்தீபுத்தஹதீபு எனும் நூலின் 10-வது வால்யத்தில் நாற்பதிற்கு மேற்பட்ட நபர்களை மாலிக்எனும் பெயரால் வரைந்திருக்கிறார்கள்.

எனவே, இமாம் மாலிக் ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் மரணித்துவிட்டார்களெனக்கூறினது முழுதும் புரட்டென்பது வெளிப்படையாய்விட்டது.

வினா 2:- ஸஹீஹ் முஸ்லிமின் விரிவுரை இக்மால் இக்மாலுல் முஅல்லம் எனும் நூல் முதல்வால்யம் 265-ம் பக்கத்தில் அதபிய்யாவெனும்நூலில் எழுதப்பட்டிருப்பதாக வரையப்பட்டிருப்பதாவது:- ஹஸ்ரத் ஈஸபுனு மர்யம் இறந்துவிட்டதாக மாலிக் சொன்னார்.

விடை 2:- இது முழுப்பொய்யாகும். ஏனெனில் அதபிய்யாவெனும் நூல் உந்துலிஸினுடைய பகீஹ் முஹம்மத் குர்த்தபியா என்பவரின் நூலாகும். (கஷ்புல்ளுனூன் வா. 2 ப. 106, 107 பார்வையிடுக.) ஆதலின் இதுவும் நம்பிக்கை இழந்ததாகும். அன்றியும் இமாம் மாலிக் அவ்வாறு சொன்னதாகச் சொல்லுவது புரட்டென்பதை மேலே துலக்கமாக விபரித்துள்ளோம்.

ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் வானுலகத்தில் சரீரத்துடன் ஜீவித்

ஆராய்ந்துகொள்வோமென்ற எண்ணம் சிறிதுமில்லையென் பது புலனாகிறது. இப்படி ஆக்ஷேபித்து நம்பர்களை அதிகப் படுத்துவதானால் எத்தனையோ நம்பர்களை அதிகப்படுத்த லாம். குர்ஆனில் "பிஇத்னி" அல்லாவுடைய உத்திரவைக் கொண்டு இவ்விஷயங்களெல்லாம் நடத்திக் காட்டினதாக

---

திருக்கிறார்களென்பதும் பின்னுக்கு இறங்குவார்களென்பதும் உண்மையென்பதற்கு கீழ்கண்ட ஹதீதுகள் சாக்ஷியாகும்.

1. (ஹதீது) நாயகம் அருளினார்கள் மரியமுடைய மகனான ஈஸா (அலை) பூமியளவில் இறங்குவார். பின்பு விவாகம் செய்வார். பின்பு குழந்தைகள் பிறக்கும். இன்னும் உலகத்தில் 45 வருஷம் ஜீவித்திருப்பார், பின்னர் மரணமாவார். எனது கபுரின் பக்கத்தில் அடங்கப்படுவார். (கியாம நாளில்) பின்னர் நானும் ஈஸப்னு மரியமும் அபூபக்கருக்கும் உமருக்கும் மத்தியிலிருந்து எழுப்புவோம். (மிஷ்காத்)

2. (ஹதீது) வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பஜ்ஜ—ர்ரௌஹா (இது மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையிலிருக்கிறது. நவவீ ஷரஹ் முஸ்லிம்) ஹஜ்செய்ய இஹ்ராம்கட்டுவார். (முஸ்லிம்)

(3) (ஹதீது) பின்பு அந்நேரம் எனது சகோதரர் ஈஸபுனு மரியம் வானத்திலிருந்து இறங்குவார். (ராவி இபுனுஅப்பாஸ் இபுனு அஸாக்கிர்.)

(4) ஹதீது நாயகமவர்கள் யூதர்களிடம் கூறினதாவது. நிச்சயமாக ஈஸா (அலை) மரணமாகவில்லை. இன்னும் ஐயமின்றி அவர்கள் கியாமத்திற்கு முன் உங்களின் புரம் வருகிறவர்களாயிருக்கிறார்கள் (ருவிஹஸரத் ஹஸன்பஸரீ தப்ஸீர் இபுனுகதீர்.)

இவ்வாறு ஹதீதின் மூலம் ஹஸ்ரத் ஈஸா (அலை) வானத்தில் ஜீவித்திருக்கிறது ருஜுவாயிருக்க இயேசுவின் இரகசியம் 139-ம் பக்கத்தில் "ஈஸா அலைஹிஸ்ஸலாம் வானத்தில் உயிருடனிருப்பதாகச்சில முஸ்லிம்கள் நம்புகிறார்களென்று குர்ஆன் ஷரீபின் சில ஆயத்துக்குப் பொருள் செய்த சில வியாக்கியானிகள் கிறிஸ்தவர்களின் கட்டுக்கதைகளை எல்லாம் நம்பினதன் பயனாகத் தம்முடைய

விளங்குகிறதே யல்லாது ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் தங்கள் சுய சக்தியினல் இவ்விஷயங்களை செய்துகாட்டினதாக எங்கேனும் கூறப்பட்டில்லை. குருடர்களுக்குப் பார்வையளித்ததும் செவிடர்களுக்கு கேள்வியளித்ததும் குஷ்டரோகிகளை சொஸ்தப்படுத்தியதும் இறைவனின் ஏவுதலால் நடந்தேறினதென்பது எமது குர்ஆன் கரீமால் அதிவியக்தமாகக்கூறப்பட்டிருக்கிறது. ஆதலின் இவையெல்லாம் இறைவனின் தத்துவத்தை வெளிப் படுத்துகிறதேயன்றி ஹஸ்ரத் ஈஸாநபியவர்களின் தத்துவத்தை வெளிப்படுத்துவதன்று. ஆதலால் இவ்வற்புதத்தால் அவர்களின் மேன்மை ஸ்திரமாகாது. எங்கள் நபியவர்கள் இதுபோன்ற பல அதிசயங்களை இறைவனின் உத்தரவைக்கொண்டு செய்துகாட்டினதுமன்றி ஓர் உலகததையே சீர்திருத்தி உத்தம பாதையில் சேர்த்துவிட்டார்கள். எனவே இவர்களே மகாசிரேஷ்டரென்பது அறிஞர் அறிந்த உண்மையாகும்.

## வினை:- 9.

வீட்டில் உணவுக்காக வைத்திருக்கும் மறைவான பொருளை இன்னின்ன பதார்த்தமென மஸீஹ் (அலை) கூறிவிடுவதாய் குர்ஆனில் காணப்படுகிறது. இத்தகைய சக்தி இறைவனுக்குளதாதலின் இயேசுவும் இந்தத்தெய்வத்தன்

---

சொந்த அபிப்பிராயமாகவே இவ்விஷயத்தைச் சேர்த்து எழுதியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சாராரான வியாக்கியானிகள் சிலர் மட்டும் தம் சொந்த அபிப்பிராயமாக ஈஸாவைப்பற்றி எழுதிச் சேர்த்து வைத்திருப்பதல்லாமல் வேறு எந்தக் குர்ஆன் ஆயத்தைக் கொண்டேனும் அல்லது நாயக வாக்கியங்களைக் கொண்டேனும் ஈஸாநபியவர்கள் உயிருடன் இன்னும் வானத்திலிருக்கிறார்களென்று வாதித்துச் சாதித்தல் முடியாது'' என்று எழுதியிருப்பது பெரும் பொய்யென்பது சூரியனைப்போல் பிரகாசிக்கிறது.

மையில் கூட்டாளியாயிருக்கும். உங்கள் நபியவர்கட்கு இத் தன்மை இல்லையாதலின் எங்கள் இயேசுவே சிறந்தவர்.

## விடை:- 9.

பாதிரிகளின் முரட்டுக் கேள்விகளுக்கு நாம் மிக வியப்படைகிறோம். கிறிஸ்தவர்களே கேட்பீர்களாக; பைப லில் "அவர் முடிவுநாள் சம்பவிக்கும் நாளையும் நாளிகையும் என் பிதா ஒருவரே தவிர மற்றொருவனு மறியமாட்டா னென்று" மத். 24, 36 லும்; அவர் பசியார அத்திமரத் தின் கனிகளைப் பறித்துப் புசிக்கலாமென்று ஒரு அத்தி மரத்தண்டை போய்த் தேடினதில் அதில் கனிகளில்லாதி ருந்ததைப் பார்த்து சபித்ததாய் ஷை 21, 19-ல் கண்டிருப் பதால் நுங்களது பைபலின்படி அவர் மறைவின் சங்கதி களை அறியாதவரென்று ஸ்திரப்பட்டிருக்க அதற்கு நேர் மாற்றமாக நீங்கள் தானே கூறுவதன்றோ பெரும் வேடிக் கை; தீர்க்கதரிசிகளுக்கு பின் வரும் விஷயங்களைக்குறித்து அவசியப்பட்ட நேரங்களில் இறைவன் அறிவிப்பதுண்டு. உதாரணமாக:- ஹஸ்ரத ஈசுவே "பிற்காலத்தில் அஹ்மது வருவார் என்று கூறியிருப்பதுபோலாம்." (குர்ஆன்)

இவ்விஷயங்களால் தெய்வத்தன்மை உண்டுமென நம்பு வது விக்கிரகத்தொழும்பர்களின் குணமென்பதை கிறிஸ் தவர்கள் அறியாதது தான் பெரும் விந்தை, எங்கள் நபியவர் கள் அநேக ரகசியங்களை வெளியிட்டிருக்கிறதுமன்றி உலக முடியும் வரை நடக்கும் முக்கிய சம்பவங்களையும் மறுமை யில் நடக்கப்போகும் விஷயங்களையும் மிகத்தெளிவாகக் கூறிப்போயிருக்கிறார்கள். இதனால் நாங்கள் அவர்களைத் தேவரென்றாவது அல்ல தெய்வத்தன்மையில் பங்குள்ளவ ரென்றாவது தேவகுமாரனென்றாவது கூறுவதில்லை. ஒருக் கால் இது தெய்வத்தன்மை தானென்றால் இவ்வாறு இரக-

சியங்களை வெளியிட்டிருக்கும் தீர்க்கதரிசிகளையும் விசேஷமாக எம் நபிதிலகமவர்களையும் தேவரென்றே கிறிஸ்தவர்கள் அங்கீகரித்தல் வேண்டும். அங்ஙனமில்லையாயின் இது இறைவனால் அறிவிக்கக்கூடிய ஓர் விஷயமென்றும் இதனால் மேன்மையெனக்கூறுவதுப்பாமரக் குணமென்றும் கிறிஸ்தவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

## வினா:- 10.

குர்ஆனில் சர்வ நபிமார்களும் பாவம் செய்தவர்களென்று கூறப்பட்டிருக்கிறதுடன் விசேஷமாக முஹம்மது (நபிஸல்) அவர்களையும் நீர் தமது பாபமன்னிப்பைத்தேடும் என்று கண்டிருக்கிறது. இயேசுவைப்பற்றி இவ்வாறு சொல்லப் பட்டில்லாததால் இவர் பாபமில்லாதவராகவும் உங்கள் நபியைவிட சிரேஷ்டராகவும் ஏற்படுகிறதல்லவா?

## விடை:- 10.

கிறிஸ்து மதத்தை உயர்த்திக்காட்டுவதற்காக எல்லா நபிமார்களும் பாவம் செய்தவர்களென குர்ஆன் கூறுவதாகச்சொல்வது ஓர் பெரும் புழுகேயாகும். மதத்திற்காக பொய்கூறும் வழக்கம் கிறிஸ்தவர்களில் உண்டாயிருக்கிறதென்று உல்யம் மேவர் எழுதியிருப்பது ருஜுவாகிறது. (திரி. 180 ப.)

நபிமார்கள் பாவம்செய்யமாட்டார்கள். அப்படிபாவஞ் செய்கிறதானால் இவர்களுக்கும் மற்றோருக்கும் வித்தியாசமென்ன? ஆதலின் பாவஞ் செய்யமாட்டார்களென்பது நிதர்சனமாகிறது, எனினும் மறதியுண்டாகலாம். இவ்வாறு தோன்றிவிடினும் இறைவன் எச்சரித்து அவர்களை தூய்மைப்படுத்தி விடுவான் ஹஸ்ரத் முஹம்மது நபியவர்களோ ஆரம்பத்திலிருந்து பரிசுத்தரென்பது அக்காலத்திய குறைஷிகளால் கொடுத்த அல் அமீன் நம்பிக்கையுள்

ளவர், ஸாதிக், உண்மையுடையவர் என்ற பட்டங்களால் ருஜுவாகிறது. அக்காலத்திலிருந்த குறைஷிகளும் பிற்காலத்தில் ஜென்ம விரோதியானவர்களுங்கூட அவர்களைப் பாவஞ் செய்தாரென்று கூறவில்லை. உண்மையுடையோரென்றே கூறியிருக்கிறார்கள். அபூசுபியான் (ரலி) ஹிரக்லில் அரசனிடம் கூறின சாக்ஷியத்தைப் பார்க்க. (திருநபி சரித்திரம் 273 ப.)

இவ்வாறிருக்க குர்ஆனில் நீர் உமது பாபத்துக்கு மன்னிப்புத்தேடும் என வந்திருப்பதின் உண்மைக் கருத்துகளை உள்ளவாறு விளங்காமற் பேதமைத் தன்மையால் உங்கள் நபி பாவஞ்செய்தவர் எனக்கூறுவது நிகரற்ற மடமையேயாகும். நீர் உமக்காக மன்னிப்புத்தேடும் என்பதின் கருத்தாகிறது இறைவனின் பெருமையைக் குறித்துப் புகழ்ந்து அடிபணிந்து அதிகப் பாக்கியங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பாபத்தில் வீழாதிருக்க மன்னிப்புத் தேடிக்கொள்வதற்கும், தங்களது உம்மத்துக்களின் மன்னிப்புக்காக வேண்டுவதுமாக ஆகும். சேனைத்தலைவனை ஒருவனைப் பார்த்து உன் நிலைமையைப் பேணிக்கொள் எனக் கட்டளையிட்டால் அவன் தன் நிலைமையை மட்டும் பேணிக்கொள்வானா? தனக்குக் கிடைத்த உத்திரவு சேனைக்குச் சேர்ந்ததெனப் பாவித்து நடந்துகொள்வதைப்போல் நபிமார்களுக்கிறங்கிய வாக்கியம் அவர்களைச் சுட்டிக்காட்டினாலும் அது அவர்களைப் பின்பற்றியவர்களையே குறிக்கும் என்பது யாவருமறிந்த உண்மை.

இயேசுவை ஒருவன் நல்ல போதகரே என அழைக்க அதற்கு அவர் நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன். தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையேஎன்றார். (மத். 19-16). இவ்வாக்கியத்தைக் கொண்டு இயேசுவைப் பாவியெனக் கிறிஸ்தவர்கள் கூறுவார்களா? இல்லையென்றால்

எம் லோகரக்ஷகரையும் கூறல் பொருந்தாதென மிக கெம்பீரமாய்க்கூறுவோம்.

### வினு:- 11.

உங்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மற்றும் சென்றுபோன நபிமார்களைப்போல் 63-வது வயதில் மரணமாய் மண்ணுக்குள் அடக்கப்பட்டு மண்ணோடு மண்ணய்விட்டார். ஆனல், ஈஸா நபியவர்களோ இன்னும் வானத்தில் இப்பூத சரீரத்துடன் ஜீவித்து வருகிறார். உயிருள்ளவருக்கு இறந்துபோனவர் சமமாகாரென்பது உங்கள் திருமறைவிதி. ஆதலின் விசேஷ மதிப்புடையவர் ஏசுவல்லவா?

### விடை:- 11.

ஹஸ்ரத் ஈஸா நபியவர்கள் வானுலகுக்கு ஏற்றப்பட்டார்களென்ற இந்த விஷயமே கிறிஸ்தவர்களுக்கு பெரிய மகத்துவமாகத் தெரிகிறது. இதன்மீதே மகிழ்வெய்திக் கூத்தாடுகிறார்கள். எனினும், விண்ணுலக ஏற்றத்தின் உண்மை இரகசியங்களை சிந்தனை செய்வார்களாயின் எம் நபிதிலகம் அவர்களின் பொன்னடியில் சரணமடைவதே பெரும் மோக்ஷமெனக் கருதநேரும்.

ஹஸ்ரத் ஈஸா நபியவர்களின் சிருஷ்டியமைப்பு பூவுலகத்தைக் கொண்டும் வானுலகத்தைக் கொண்டும் இணைக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் மரியம் (அலை) அவர்களில் நின்றும் வெளி வந்தது பூமிக்குச் சமமாகவும் ஹஸ்ரத் ஜிபுரீல் அவர்களின் மூலம் றூஹ் (ஆவி) வந்தது வானத்துக்குச் சமமாகவும் ஏற்பட்டது. சரீரத்தைவிட ஆன்மாவின் பலம் அதிகமானதால் சொற்ப காலம் மண்ணுலகத்திலிருந்து நீண்டகாலம் வானுலகிலிருக்கும்படி நேர்ந்தது. ஆன்மாவின் தன்மையாகிறது மலக்குகளுக்கு நிகரானதினல் வானுலகிலிருக்கு மட்டும் இதர வானவர்களைப்போல ஊண்

குடிப்பின்றி ஜீவித்திருக்கிறார்கள். எனவே, இவ்விரு சம்பவத்தையும் இவர்களளவில் இறைவன் பூர்த்தி செய்துவிட்டான்.

அல்லாமா பகவீயவர்கள் முஆலிமுத்தன்ஸீலில், ஹஸ்ரத் கதாதா (ரலி) அவர்களைக் கொண்டு ரிவாயத்துச் செய்தது நாம் மேலே கூறியுள்ளதை முழுதும் ஆதரிக்கிறது. கதாதா ரலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள்:- ஹஸ்ரத் மஸீஹை இறைவன் வானுலகத்திலெடுத்துக் கொண்டான். இன்னும் அமரர்களுக்குறிய உடைகளை யளித்து அவர்களைப்போல் ஊண் குடிப்பையும் நிறுத்திவிட்டான். அவர்கள் தாய்வழியில் பூமியுடையவர்களாகவும் றூஹின் வழியில் வானவர்கட்குச் சமமாகவு மிருந்தார்கள். ஆதலின் இறைவன் இருவழிகளையும் பூர்த்தி செய்தான். (முஆலிம் 162)

அல்லாமா அப்துல் வஹ்ஹாப் ஷஅருனி (ரஹ்) எழுதுவதாவது:- ஹஸ்ரத் மஸீஹ் தந்தையன்றி ஜனனமானார்கள். இதன்பொருட்டே அவர்களை றூஹ் என தீர்மானிக்கப்பட்டது. றூஹின் அளவுக்குத் தக்கபடி இறைவன் அவர்களை வானத்தில் எடுத்துக்கொண்டான். மண்சம்பந்தப்பட்ட அளவுக்கு அவர்கள் பூமியிலிருந்தார்கள். இன்னும் இருப்பார்கள். நூர் என்னும் ஒளிவின் தத்துவம் அவர்களில் மிகைத்திருந்ததினால் வானலோக ஜீவிப்பு நீண்டகாலமாக விருக்கிறது. ஷைக் இபுனுல் அரபி(ரலி) கூறுவதாவது:- ஹஸ்ரத் மஸீஹ் பாலுண்ணும்போது நான் எங்கேயிருந்தாலும் அவன் என்னை சிறப்புடையவனாகச் செய்தான். (குர்ஆன்) என்று வார்த்தையாடின விஷயம் வானுலகத்திலிருந்தாலும் பூலோகத்திலிருந்தாலும் என்பதில்

சமிக்கை செய்கிறது. (அல்யவாகீத் வல் ஜாஹிர் வா. 1 ப. 106) *

ஷைக் ஜாமி கூறுவதாவது:- ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கட்கு மூன்று நிலைமை உண்டாயிருக்கிறது. (1) தேக சம்பந்தம் (2) ஆன்ம சம்பந்தம் (3) இரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்த சம்பந்தம் ஆக மூன்றும். இந்த ஆன்ம சம்பந்த பலத்தினால்தான் மரணித்தவர்களை யெழுப்பவும் குருவி உண்டுபண்ணி பறக்கச் செய்யும் சக்தியும் ஏற்பட்டது. இன்னும் இந்த வல்லமையினால் ஆயிரத்துக்கதிக வருஷமாக தற்சமயம் வரை ஜீவித்திருக்கிறார்கள். இது ஜிபுரீல் (அலை) அவர்களால் ஊதின பலமேயாம். (ஷாஹ் புஸூஸுஸ்ஹிகம். கலிமா, உயூயா.)

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மார்க்கத்தை விர்த்திசெய்யும் பொருட்டு அவர்களுக்குப்பிற்காலத்தில்வந்தோரெல்லாம் நபியாக விருந்தார்கள். புகாரீ ஷரீபின் ஹதீஸ் ஹஸ்ரத் அபூஹுறைறா (ரலி) அவர்களால் கூறப்படுவதாவது:- பனீ இஸ்ராயீல்களின் பேரில் நபிமார்கள் ஆதிக்கம் செலுத்திவந்தார்கள். ஒரு நபி மரணமாய்விட்டால் மற்றொருவர் அந்த ஸ்தானத்தில் ஆய்விடுவார்கள். ஆயினும், எனக்குப்பின் யாருக்கும் (புதிய) நபித்துவம் கிடையாது இது நிச்சயம். ஆனால் கலீபாக்கள் அதிகமாவார்கள். (புகாரீ ஷரீப்) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பின்னுள்ள நபிமார்களெல்லாம் தௌராத்தைக் கொண்டே ஜனங்களை சீர்திருத்தி வந்தார்கள். இவ்விஷயத்தில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு பெரிய கௌரவம் ஏற்பட்டிருந்தது.

* சில விதண்டாவாதிகள் இமாம் ஷஅரானியும் ஹஸ்ரத் ஈஸா (அலை) இறந்துபோய்விட்டார்களெனக் கூறுகிறது முழுப் புரட்டென்பதை நேயர்கள் அறியட்டும்.

இந்த தௌராத்கையும்விடப் பெரிய மஹோன்னதப்பதவியை ஹஸ்ரத் முஹம்மது நபியவர்கட்கு அளிப்பதற்காக புதிய ஷரீஅத்தையுடையவர்களும் உலுல் அஸ்மென்னும் விசேஷமதிப்பை யுடையவர்களிலொருவருமான ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஜீவிக்கச்செய்து அவர்களால் பிற்காலத்தில் தோன்றும் பித்னுக்களை யடக்கி சீர்திருத்த வானத்தில் வைத்துள்ளான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்தை நடத்தாட்டி உலகமக்களை சீர்திருத்த நபிமார்களை இறைவன் அனுப்பிவந்தான். எனினும் கடைசி நபியாகிய நபிகதிலகம் அவர்களின் மார்க்கத்தைப் போதித்து மக்களை நேர்வழி நடத்துவதற்காக ஷரீஅத்துடைய ஓர் விசேஷித்த நபியைக் கொண்டே நடத்துவதானல் இந்த கடைசி நபியவர்களுடைய மகத்துவம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய மகத்துவத்திலும் அநேக மடங்கு மேலோங்கி விட்டதென்பதும் பகற் சூரியனைப் போல் காணக்கிடக்கின்றது. இன்ஜீல் பர்னபாஸில் ஹஸ்ரத் ஈஸா (அலை) இறைவனிடம் இறைவா! என்னை முஹம்மது நபியின் மார்க்கத்துக்கு உதவிசெய்கிறவனுகச் செய்விப்பாயாக என்று பிரார்த்தனை புரிந்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறது. இறைவன் இந்தப் பிரார்த்தனையின்படி அவர்களை ஜீவிக்க வைத்திருக்கிறு னென்பது நிச்சயமாய்விட்டது. இது சம்பந்தமான விஷயங்கள் முஆலிம்; அல்யவாஹீத் வல்ஜவாஹிர், ஷைக்இப்னுல்அரபி, ஷரஹ்புஸூஸுல்ஹிகம், ஷைக்ஜாமி, தப்ஸீர பத்ஹுல் பயான், நவாப்ஸாஹிப், ஜாமிஉல் பயான், தப்ஸீர் ஜமல், மதாரிக்குத்தன்ஸீல், காஸின், ஷரஹ் முஸ்லிம், இமாம் நவவீ, ஹுஜ்ஜதுல் கராமா என்னும் கிரந்தங்களில் வருகின்றன.

எனவே கிறிஸ்தவர்கள் கடவுள் குமாரனென்றும் பாவ நிவர்த்தி செய்கிறவரென்றும் விஸ்வாசித்து வரும் ஹஸ்ரத்

ஈஸா(அலை) அவர்களே ஹஸ்ரத் முஹம்மது நபியவர்கட்கு கீழ்ப்படிந்து மதசீர்திருத்தம்செய்ய வருவதாயின் ஹஸ்ரத் முஹம்மது நபியவர்களின் எல்லையில்லாப்பதவி எத்தன் மையதென்பதை கிறிஸ்தவர்கள் உணர்ந்துகொண்டு தாம தியாமல் இஸ்லாத்தைப் பின்பற்றி மோக்ஷமெய்துவார் களாக.

இறந்தவர்களும் உயிருள்ளவர்களும் உலக விவகாரங் களில் சமமாகாரென்பது உண்மையே யாயினும் உயர்பத விக்கும் இதற்கும் சம்மந்தமில்லையென்பது வெளிப்படை. இறந்துபோனதால் உயர்பதவி யற்றவரெனக்கூறும் பக்ஷம் பைபலின்படி (குர்ஆனைக்கொண்டல்ல) சிலுவையிலறைந்து கொல்லப்பட்ட இயேசுநாதர் மூன்று நாள்வரை பிரேதமா யும் அவரைக் கொன்றவர்களும் அவரின் சிஷ்யர்களும் உயி ருடன் இருந்திருப்பதால் இவர்களும் இயேசுவைவிடச் சிறந்தவர்கள் என்றே கூறவேண்டும். அங்ஙனமில்லையா யின் இயேசுநாதர் ஜீவித்திருப்பதனுல் மேன்மையென்று கூறக்காரணமில்லை யென்பதை கிறிஸ்தவர்கள் ஒத்துக் கொள்ளவேண்டும்.

## வினு:- 12.

முஹம்மதியர்கள் ஒப்புக்கொள்ளுகிறபடி உலகமுடி வின்போது மஸீஹ் (அலை) மறுமுறை தோன்றி ஆதாமின் சந்ததியார்களை ஆதரிக்கவருவார்கள். ஆரம்பமும் முடிவும் இயேசுவாய் இருப்பதால் இவரே உங்களது நபியைவிட மேலானவர்.

## விடை:- 12.

பாதிரிகள் வினு விடுத்து நம்பர்களை அதிகரிக்கின்றார் களேயல்லாது அதன் உண்மை தாத்பரியங்களை விளங்க வேண்டுமென்ற நோக்கம் அவர்கள் சித்தத்திலில்லையென தெள்ளிதில் புலனுகிறது.

ஹஸ்ரத் மூஸா [அலை] அவர்களின் மார்க்கத்தை விருத்திசெய்ய பின் காலங்களில் நபிமார்களே வந்துள்ளனர். ஹஸ்ரத் முஹம்மது நபியவர்கட்குப் பின் நபி இல்லை யாதலின் ஹஸ்ரத் முஹம்மது நபியவர்கட்கு இது ஓர் குறை இருந்தது. இக்குறையை நிவர்த்தித்து சர்வ நபிமார்களிலும் சிறப்புடையோரென எண்பிக்க கடவுளுக்குச் சித்தமிருந்ததனால் வேதத்தையுடையவரும் உலுல் அஸ்மென்னும் சிறந்தபட்டம் பெற்றவருமான ஒருவரை அக்காரியத்திற்காக இறைவன் உயிரோடுவைத்திருக்கின்றான். ஹஸ்ரத் ஈஸா [அலை] அவர்கள் பிற்காலத்தில் வந்து இஸ்லாம் மார்க்கத்தில் நுழைந்திருக்கும் பித்னுக்களையும் விபரீதப் புறட்டுகளையும் துர்க்கொள்கைகளையும் அகற்றி நபியவர்களின் நடப்புகளை விர்த்திசெய்து இஸ்லாம் மார்க்கத்துக்கு உண்மை ஊழியம் புரிவார்கள். இத்தகைய இயேசுநாதரே இஸ்லாம் மார்க்கத்துக்கு ஊழியம் புரியும் கலீபாவாக ஏற்படும்போது இந்தஇஸ்லாம்மார்க்கத்தைக் கொணர்ந்த நபியவர்களின்பெருமையும் சிறப்பையும் யாரால்எழுதக்கூடும்? ஒருக்கால்உங்களது நபியுடையஉம்மத்திலிருந்துஒருவரைநபியாக அனுப்பி ஏன் இப்படிச் செய்யலாகாது எனக் கேட்கலாம். எங்களது நபியவர்கள் இறுதித் தூதராகவும் அதற்குப்பின் நபி இல்லையென்று இறைவன் தீர்மானித்திருப்பதாலும் வேதங்களில் மாறுபாடு நடக்காததாலும் புதிய நபி பிறந்து வரவேண்டியதேற்படாது. ஆதலின் வழிதவறிப்போன மக்களைத்திருத்தி இஸ்லாமிய சன்மார்க்கத்தில் கொண்டுவருவதற்காக ஹஸ்ரத் ஈஸா நபியவர்களை இறைவன் கலீபாவாக நியமித்து உயிருடன் வைத்திருக்கிறான். ஹஸ்ரத் ஈஸா நபியவர்களே இஸ்லாத்தின் அபிவிருத்தியைக்கோரி ஊழியம்புரிவதானால் அந்த இஸ்லாத்தைக் கொணர்ந்த நபி பெருமானவர்களின் மகாசிறந்த மஹோன்னதப் பதவியை எவரே மதிப்பிடுவர்? எனவே ஹஸ்ரத் முஹம்மது நபி

யவர்களின் பெருமை தெள்ளிதிற் விளங்குவதுடன் இஸ்லாம் மார்க்கத்தை அபிவிருத்தி செய்ய அனுப்பப்பட்ட ஹஸ்ரத் முஹம்மது நபியவர்களின் கலீபாவாகும் இயேசுநாதர் என்பதும் அறியக்கிடக்கின்றது. கிறிஸ்தவர்கள் உண்மையை உணர்ந்து நேர்வழிபெறுவார்களாக.

## வினா:- 13.

உலக முடிவுக்குச் சற்று முன்பு குபிர் குலத்தவனான தஜ்ஜால் தோன்றி உங்கள் நபியுடைய சிஷ்யர்களை தொந்தரவு புரியும்போது அவனைச் சிரச்சேதம் செய்யவும் ஜனங்களை நேர்வழியில் கொண்டுவரவும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) வானத்திலிருந்து இறங்கி வருவார்களென்றும் வேதக்காரர்களெல்லோரும் அவர்மீது ஈமான்கொள்வார் களென்றும் உங்கள் வேதமே கூறுகிறது. இத்தகைய கொடிய கிளர்ச்சியை யடக்கி யொழித்து சன்மார்க்கத்தைப் புகட்ட உங்களது நபி என் கபுரிலிருந்து எழும்பி வரக்கூடாது? மாக்ஷிமைதங்கிய இக்காரியங்கள் மஸீஹ்(அலை)அவர்களின் வேலையெனத் தீர்மானிக்கப் பட்டதிலிருந்து இவரே மகா புருஷர் என்பது புலனாகவில்லையா?

## விடை:- 13.

எங்கள் நபியவர்கட்கும் பின் ஏற்படும் மதவிஷயமான தவறுகளைச் சீர்திருத்த கலீபாக்கள், முஜத்திதுகள், வருவதுபோல் ஹஸ்ரத் ஈஸா நபியவர்களும் ஓர் கலீபா (பிரதிநிதி) எனும் ஸ்தானத்தில் வந்து தஜ்ஜாலை கருவறுத்து சிலுவை வணக்கத்தை அடியோடொழித்து மகா அசுத்தப் பிராணியாகிய பன்றியை அழித்து இல்லாமற் செய்து நீதியை நிலைநிறுத்துவார்கள் என்று ஹதீதில் வந்திருக்கிறது. பாதிரியார் இவ்விஷயங்களை ஜாடையாக விட்டுவிட்டு மீத விஷயங்களை வேறுவிதமாக நகல் செய்துகொண்டது

ஆச்சரியமே. இன்னும் எங்கள் நபி பெருமானவர்கள் மிஅராஜ் (வானலோகம்) சென்றிருந்தபோது ஹஸ்ரத் இப்ருஹீம் மூஸா ஈஸா(அலை) இவர்களைச் சந்தித்தனர். அவ்வமயம் முடிவுநாள் எப்போ வருமென ஓர் விவாதம் கிளம்பியது. ஹஸ்ரத் இப்ருஹீம், ஹஸ்ரத் மூஸா(அலை) இவர்களிருவரும் அந்த சமயம் எங்களுக்குத் தெரியாதென்ற போது ஹஸ்ரத் ஈஸா(அலை) அந்த குறிப்பிட்ட நேரத்தை இறைவனையன்றி எவருமறியார். எனினும் இறைவன் என்னுடன் வாக்களித்திருப்பதுபோல் தஜ்ஜால் வெளிப்படுவானாயின் எனது கரத்தால் கொல்லப்படுவான் (அதாவது அவனைக் கொல்வதற்காக நான் இறங்குவேன் இதுவே கியாமத்து நாளின் அடையாளமாகும்) என்று கூறினதாக (அஹ்மது, பைஹகி, இபுனுமாஜா, ஹாகிம், உடைய) ஸஹீஹான ஹதீதில் தக்க ஆதாரத்துடன் வருகிறதும் மேற்கூறிய எம் நோக்கத்தை உறுதிப்படுத்துகிறது. அன்றியும் அவ்வமயம்முஸ்லிம்கட்கு இமாமாகவிருக்கும் மஹ்தீ அலைஹிஸ் ஸலாமைப் பின்பற்றி தொழுகை புரிந்து அப்பால் தங்களுக்கேற்பட்ட கடமைகளை பூர்த்திசெய்வார்களென்றும் வருவதால் ஓர் கலிபாவின் ஸ்தானத்தில் வந்து இஸ்லாமிய மத ஊழியம் புரிவார்களென்பது இன்னும் நிச்சயமாகப் புலனாகிறது.

இன்னும் ஹஸ்ரத் இயேசுநாதர் அவர்கள் இறங்கி வருவதும் அவசியமாகவே தோன்றுகிறது. ஏனெனில் நீங்கள் கிறிஸ்தவர்களெனச் சாற்றிக்கொண்டு இறைவனின் அடிமையும் ரசூலுமாகிய ஈஸா(அலை) அவர்களை தேவனென்றும் தேவகுமாரனென்றும் ரக்ஷண்ய கர்த்தாவென்றும் பாவநிவர்த்திக்காக சிலுவையில் அறையப்பட்டாரென்று அந்த சிலுவை வணக்கம் புரிந்து கொண்டும் அவர்களால் முன்னறிக்கை செய்யப்பட்ட இறுதி நபியவர்களை

விஸ்வாசியாமலுமிருக்கும் உங்களது துர்க்கோட்பாடுகளை யகற்ற அவர்கள் தாங்களே இறங்கி வ; என்னை விஸ்வாசிக்கிறேனென்று கூறும் பொய்யர்களே! நீங்கள் மெய்யர்களாயின் எனது முன்னறிவிப்பின்படி இறுதித்தூதரைப் பின்பற்றுங்களென்று நற்புத்தி கூறவும் அவ்வாறு கூறியும் ஒப்புக்கொள்ளாதவர்களை சிக்ஷைபுரிந்து நேர்வழியில் கொடுவரவுமே அவர்கள் வருவார்கள். முஸ்லிம்களாகிய யாங்கள் இப்போது கூறும் எதார்த்தங்களை நம்பாவிட்டால் உங்களது இயேசுநாதரே உங்கட்குத் தகுந்த புத்தி புகட்டி எல்லோரையும் தங்களது சொல்லளவில் திருப்புவார்கள். வேதக்காரர்களெல்லோரும் அவர்கள் பேரில் விஸ்வாசங் கொள்வார்களென்பதின் தாத்பரியமும் இதுவே. மாக்ஷிமை தங்கிய எம் நபிகடிலகம் அவர்களின் நடப்பைப் பின்பற்றி சீர்திருத்தஞ்செய்து இஸ்லாத்தின் ஊழியம் புரிய ஹஸ்ரத் இயேசுநாதர் வரும்போது மதத்தைக் கொணர்ந்த எம் பெருமானவர்கள் வரவேண்டிய அவசியமில்லை. கவர்னர்கள் நடத்தவேண்டிய பொறுப்பை அரசன் நடத்த வரவேண்டியதில்லை. எனவே, ஹஸ்ரத் ஈஸா நபியவர்களே உங்களது கெட்ட கொள்கையை யகற்றி இஸ்லாம் மார்க்கப் பிரசாரத்திற்காக வருவதாயின் அம்மார்க்கத்தையுடைய இறுதித் தூதரென்ற எம் வள்ளலின் மகத்துவத்தையும் சிறப்பையும் எடுத்துக்கூறவும் வேண்டுமோ? ஹஸ்ரத் ஈஸா நபியவர்களே இஸ்லாம் மார்க்க சீர்திருத்தகராக வரும்போது கிறிஸ்தவர்கள் வேறு எந்த மதத்தில் சேர்ந்து கதிமோக்ஷமடையச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்களென்பது விளங்கவில்லை. உண்மையை விளங்கத் தகுந்தவர்களாயின் இஸ்லாம் மார்க்கத்தில் சரணமடைவார்களென்பதிற் றடையில்லை.

## வினா:- 14.

குர்ஆனின் தீர்மானப்படி முஹம்மது (ஸல்) ஸாஹிபு பாவஞ்செய்தவரென்றும் சாதாரண தூதரென்றும் ஏற்படுகிறது. இயேசுநாதரைப் பற்றியோ அவர் அல்லாவுடைய வார்த்தை என்னும் றூஹை மரியமின் மீது ஊதினேம் எனும் மகிமையாகக் கூறியிருப்பதால் சர்வ பராபர சக்தி மஸீஹில் அடங்கியிருக்கிறதென தெள்ளிதில் அறிகிறேம் ஆதலின் முஹம்மது ஸாஹிபை விட தெய்வீக சக்தி வாய்ந்த பெருமைக்குறியவர் இயேசுவென்பதே வெளிப்படையாகிறது.

## விடை:- 14.

ஹஸ்ரத் முஹம்மது நபியவர்களும் மற்றும் நபிமார்களும் பாவங்களைவிட்டு நிவர்த்திக்கப்பட்டவர்களென்பதை 10-வது விடையில் விவரித்திருக்கிறேம். பாவஞ்செய்கிறவர்களை வழிகாட்டியாகவும் நபியாகவும் அனுப்புவது கடவுள் தன்மைக்கு ஒரு சிறிதும் பொருந்ாதென்பதை அறிவுடையோர் ஏற்றுக்கொள்வதில் ஆக்ஷேபமிராது. கிறிஸ்தவர்கள் நபிமார்கள் மீது சுமத்தும் பழி முழுப்பொய் யென்பதும் வழிகாட்டிகள் நபிமார்களின் அந்தஸ்தை அறியாதவர்களென்பதும் மிக்க சாதாரணமாய்த் தெரியவருகிறது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை யூதர்கள் பழித்துக்கூறியதை நிவர்த்தித்து அவர் இறைவனின் உத்தரவைக்கொண்டு தந்தையன்றிப் பிறந்தவர் என்பதை ஸ்தாபிக்க இறைவனுல் கூறப்பட்டிருக்கிறதே யல்லாது உயர் பதவிக்கல்ல. மேலும் மரியமின் குமாரரான மஸீஹ் ஒரு ரசூலைத்தவிர வேறில்லையென்றும் மஸீஹும் அவர் தயாரும் சாப்பிட்டிருக்கிறூர்களென்றும் அவர் அல்லாவின் அடிமையே என்றும் குர்ஆனில் தெளிவாக விபரிக்கப் பட்டிருக்கிறது.

உண்மை இங்ஙனமிருக்க ஒரு சிறிதும் ஆராயாமல் பராபர னென்றும் குமாரனென்றும் தெய்வீக சக்தி வாய்ந்தவ ரென்றும் கூறுவது பெரும் நகைப்பையே தருகின்றது மன்றி கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள பேதா பேதங் களை அறியாத மக்களென்றும் புலனாகிறது. ஆதலின் கிறிஸ்தவர்கள் உண்மையை உணர்ந்து இனியேனும் இஸ் லாத்தைப் பின்பற்றுவார்களாக.

## வினா:- 15.

எங்கள் மஸீஹ் அவர்கள் பல அற்புதங்கள் காட்டினதாக உங்கள் வேதமே முறையிடுகின்றது. உங்கள் நபி அவர்களிடம் அற்புதங்காட்டுங்களென்று கேட்டதற்கு மறுத்துவிட்டதாக குர்ஆன் சாக்ஷிபகர்கிறது. இதனால் வல்லமையுடையவரும் உயர்பதவி யுடையவரும் இயேசு நாதரென்பது விளங்கவில்லையா?

## விடை:- 15.

எங்கள் நபியவர்கள் அற்புதங்கள் கேட்டதற்கு மறுத் துவிட்டார்களெனக் கூறுவது வெள்ளைப் புழுகாகும். ஹஸ் ரத் இயேசுநாதரவர்கள் எவ்வாறு இறைவனின் அநுமதி பெற்று அற்புதங்கள் காட்டியிருக்கின்றனரோ அவ்வாறே எம் நபிகதிலகமும் அதைப்போலும் அதைவிடச்சிறந்தது மான அனேக அற்புதங்கள் மிகத்தெளிவாகக் காட்டியிருக் கின்றார்கள். அவைகளை எழுதுவதாயின் பெரும் வால்ய மாக சமையும். ஆதலின் ஈண்டு மாதிரிக்காக சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

விக்கிரஹ வணக்கஸ்தராகிய விரோதிகளின் வேண்டு கோளின்படி சந்திரன் இருதுண்டாகப் பிளந்தது. இதை எல்லோரும் தெரிசித்தனர்.

ஒருவிடுத்தம் நாயகமவர்களின் கைவிரலிலிருந்து ஜலம் ஜோலித்தோடிற்று. அதனுல் பெருங்கூட்டத்தின் தாக விடாய் தீர்ந்தது.

இன்னும் சொற்ப ஆகாரத்தினுல் ஒரு பெருங்கூட்டம் வயிராரப்புசித்துத் திருப்தியடைந்தது.

இன்னும் நாயகமவர்கள் தொடுவதினுலும் பிரார்த்தனை புரிவதாலும் வியாதியஸ்தர் சொஸ்தமடைந்து கொண்டிருந்தார்கள்.

சிறுகுழந்தை, ஊமை, உயிரினம், மரம், கற்கள் முதலியன நாயகமவர்களின் நபிப்பட்டத்தைப் பற்றி சாக்ஷி பகர்ந்து கொண்டிருந்தன.

ஒரு விடுத்தம் காபிரீன்களாகிய விரோதிகளின்பக்கம் ஒரு பிடி மண்வாரி வீசினுர்கள். அம்மண் விரோதிகளின் கண்களில் விழ அவர்கள் ஓடிவிட்டார்கள்.

இன்னும் சிறிது விரிவாகப் பார்க்கவேண்டுமாயின் இஸாலத்துஷ்ஷூக் (மௌலானுஷக் ரஹ்மத்துல்லா ஸாஹிப் முஹாஜிர் மக்கியின்) 212-ம் பக்கம் முதல் 234-ம் பக்கம் வரையிலும் திரிஏகத்துவநிவாரணம் ஆருவது அதிகாரமும் பார்வையிடவும். மேலும் எங்கள் நபியவர்களின் சிஷ்யர்களாகிய அவ்லியாக்களில் நின்றும் வெளியான லக்ஷக் கணக்கான அற்புதங்களை எழுதவும் இயம்பவும் முடியாதிருக்கும்போது இவர்களுக்கெல்லாம் வழிகாட்டியும் லோகரக்ஷகருமான அந்த நபியவர்களின் அற்புதங்களையும் பெருமைகளையும் யாரால் எடுத்தியம்பக்கூடும்? என்னே வள்ளலின் மகிமை!

மக்காவிலுள்ள குறைஷி காபிர்களின் தலைவர்களான அபூஜஹில், உத்பா, ஷைபா முதலியோர் துஷ்டத்தனமாகவும் பரிகாசத்தின் நோக்கமாகவும் அற்புதங்களைக் கேட்க

லாயினர். அதாவது முஹம்மதே எங்கள் நாடு வறுமை யுடையதும் ஜலம் குறைந்ததுமானதாகும். ஆதலின் நீர் உமது அற்புதமகிமையால் நம் நாட்டிற்குள்ளிருக்கும் மலை களை அப்புறப்படுத்திவிட்டு பயிர்விளையும் நன்னிலமாகச் செய்யவேண்டும். ஷாம், இராக் தேயங்களில் ஓடும் ஆறு களைப்போல் இவிடமும் ஆறுகள் ஓடச்செய்யவேண்டும். அன்றியும் ரக்ஷகனிடம் வேண்டுதல் புரிந்து அமரர்களை அனுப்பி அவர்கள் உமது நபிப்பட்டத்தைக் குறித்து சாக்ஷி பகரவேண்டும். இன்னும் நீர் வறுமையை விட்டு நீங்கும் பொருட்டு தங்கம், வெள்ளியினால் மாளிகைகளைத்தயார் செய்து கொள்ளவேண்டும். தவிர நாங்கள் உமது நாய கனின் வேதனைகளைக் கண்டுகொள்கிறதற்காக எங்கள்மீது வானத்தை இடிந்துவிழச்செய்யவும் வேண்டும் என்றும் இன்னும் அப்துல்லாஹிபுனு அபீஉமையாவென்பவன், நபி யவர்களை நோக்கி நீர் எங்கள் முன்னால் ஏணிவைத்து வானத்தில் மீதேறி அங்கிருந்து இவர் நபியாயிருக்கிறார். இவரை விஸ்வாஸியுங்கள் என எங்கள் பெயருக்கு லட்டர் கொண்டுவராதவரை நாங்கள் உம்மீது விஸ்வாசம் கொள் ளோம் எனக்கூறலாயினன். எனவே, இவர்கள் துஷ்டத் தனமாகவும் பரிகாசத்திற்காகவும் அற்புதங்களைக் கேட்ட தனாலும் இதற்குமுன் பஹிரங்கமாக வெளியான சந்திரன் பிளந்த அற்புதத்தைப்போல் பல அற்புதங்களைக்கண்டும் இவர்கள் விஸ்வாஸியாமல் இது ஓர் சூனியமென்று சொல்ல ஆரம்பித்ததினாலும் இவர்கள் கேட்பது உண்மைக்கல்ல வென்பதை இறைவனறிந்து "நாம் அவர்களின்மீது வானத் தின் வாசலைத் திறந்துவிட்டாலும் இன்னும் பகலெல்லாம் (அவர்கள்) அதில் ஏறிக்கொண்டிருந்தாலும் (நமது பார் வையைக் காட்டப்பட்டிருக்கிறது. இல்லை) நம்மீது சூனியம் செய்யப்பட்டிருக்கிறதென்றே கூறுவார்கள்" (குர்ஆன்

சூரத்துல் ஹஜர்) எனவல்லவன் கட்டளையிடும்படி நேர்ந்தது. இதனுற்றான் நபியவர்களைப் பார்த்து "அல்லாஹுத்த ஆலா துய்யவன் (நீங்கள் கேட்டபடி யெல்லாம் நடத்துவதற்கு) யான் யார்? ஆயினும் அனுப்பப்பட்ட ஓர் ரசூலாயிருக்கிறேன்" (சூரா பனீ இஸ்ராயீல்) எனக்கூறும்படி ஆக்ஞாபித்துள்ளான். இன்னும் இந்த நிராகரித்தோர் பிற்பாடும் தங்களுக்கு மற்றொருமாதிரியான அற்புதங்காட்டினால் தாங்கள் விஸ்வாஸிகளாய் விடுவதாக அந்த அருள் வழிகாட்டிகள் பால்கூறியுமுள்ளார். இச்சங்கதி சம்பந்தமாய் அருள்வழிகாட்டிகள் பராபரனை இரந்துவேண்ட முழுதுமுணர்ந்த அப்பரன் அந்"நிராகரித்தோர்" தம் வாக்குறுதியை நிறைவேற்றமாட்டுபவரல்ல ரென்பதை அறிந்திருந்தாலும் அறியாத மக்கள் நினைத்திருப்பதேபோல் அற்புதங்காட்டிய "அருள்வழிகாட்டியானவர் தேவாவதாரியாகவோ, தேவகுமாரனுகவோ, தேவனுகவோ இருக்கின்றாரில்லரென்பதையும் பராபரனின் சமுகத்தில் அவர் சக்திகுன்றியவராயிருக்கின்றாரென்பதையும், அவன் ஒத்தாசையின்றி அவர் ஒன்றுஞ்செய்யமுடியாதா ரென்பதையும் அந்த ஜனங்களுக்கு அறிவுறுத்தித் திருவுள்ளங்கொண்டதாலும்" அருள்வழிகாட்டிகளது வேண்டுகோளை மறுத்து "உங்கள் வேலையெல்லாம் நான் அறிவிப்பவற்றை ஜனங்களுக்கு ஓதுவது மாத்திரமே" (குர்ஆன்) என்று இயம்பியுமுள்ளான். ஆதலின் இந்த வாக்கியத்தைமட்டும் எடுத்துக்கொண்டு கிறிஸ்தவ நண்பர்கள் முரட்டுத்தனமாக வாதிப்பது அவர்களின் பேதமையைக் குறிக்கும்.

மேலும் இதே ஆக்ஷேபம் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் மீதும் ஏற்படுகிறது. "அப்பொழுது பரிசேயர் வந்து அவரோடே தர்க்கிக்கத் தொடங்கி அவரைச்சோதிக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்

பிக்கவேண்டும் என்று கேட்டார்கள். அவர் தம்முடைய ஆவியில் பெருமூச்சுவிட்டு இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிறதென்ன? இந்தச் சந்ததியாருக்கு ஒரு அடையாள மும் கொடுக்கப்படுவதில்லையென்று மெய்யாகவே உங்கட் குச் சொல்லுகிறேன் என்று அவர்களைவிட்டு மறுபடியும் படகில் ஏறி அக்கரைக்குப்போனார்." (மாற்கு அ. 8. வா. 11 12, 13.) இன்னும் லூக்கா அ. 23. வ 89. மத்தேயு அ. 4. வ 3. 4. முதலிய இடங்களிலும் ஏசு நாதரிடம் அற்புதம்கேட்க மறுக்கப்பட்டதாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாக்கியங்களினுல் ஏசுநாதர் அற்புதங்களை காட்ட வில்லையென்று கிறிஸ்தவர்கள் கூறுவார்களா? இல்லையென் ருல் எங்கள் நபியவர்கள் விஷயத்தில் மட்டும் கூறுவதாயின் முந்தின குறைஷிக்காபிரீன்களுடைய சித்தாந்தத்தைப் போல் இதுவும் சித்தாந்தமென்றே பகரலாகும்.

இவையெல்லாவற்றிலும் சிறந்ததும் எக்காலமும் உயி ருள்ளதுமான ஓர் அற்புதம் உலக முடியும்வரை நமது கண் முன்னின்று தனது ஜோதியை வீசிக்கொண்டிருக்கிறது. அதுதான் குர்ஆன் ஷரீப்.

நாயகமவர்கள் காலத்தில் விரோதியாக விருந்த விக் கிரக பூஜைக்காரரை விழித்து நாயகமவர்கள் "இதை நீங் கள் இறையின் வேதவாக்கென்பதில் சந்தேகிக்கும் பக்ஷம் எழுதப்படிக்கத்தெரியாத ஓர் உம்மியில் நின்றும் வெளிப் படும் இவ்வேத வசனத்தைப்போல் ஓர் சிறிய அததியாயத்தை இயற்றிக்காண்பியுங்கள்" என சம்பிர தாயங்கூறியழைத்தும் கீர்த்திபெற்ற பாஷா நிபுணர்களா லும், கலைஞானர்களாலும், வேறு எவராலும் இயற்ற முடிய வில்லை. நாளிதுவரை உண்டுபண்ணினவருமில்லை. இனி உண்டுபண்ணப்போவதுமில்லை. என்றென்றைக்கும் தெய்

வத்திருமறையின் இவ்வுயிருள்ள அற்புதவொளி அனைவரும் அறியும்படி சூரியனைப்போல் உலகெங்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதை யாவரும் அறிகிறோம்.

இதுவரை இவ்வுயிருள்ள அற்புதத்திற்கு நிகரில்லாததால் இஃதே தெய்வத் திருமறை யென்றும் இதை இறங்கப்பெற்ற பெருநபியவர்களே மோக்ஷலோகத்தின் வழிகாட்டியெனவும் மகிமை தங்கிய உயர்பதவி வகித்தவர்களென்றும் கரதலாகமலம்போல் தெரியவருகிறதால் கிறிஸ்தவர்கள் பிடிவாதத்தை யகற்றி உண்மையை உணர்ந்து நற்கெதி எய்த முயற்சிப்பார்களாக.

## வினு:- 16.

முன்வேதங்களெல்லாம் யாதும் குறைவின்றி பரிசுத்தத்தன்மையுடன் பூர்த்தியடைந்திருக்க புதியவேதமென்னும் குர்ஆன் வரவேண்டிய அவசியமென்ன?

## விடை:- 16.

முன்வேதங்களெல்லாம் அக்காலத்தில் மட்டுமே குறைவின்றி பரிசுத்தத்தன்மையிலிருந்தன. அவ்வேதங்கள் இறங்கப்பெற்ற தீர்க்கதரிசிகள் காலஞ்சென்றபின் முந்தின தூய்மையிலில்லாமல் மாறுபாடுகள் நடந்து வேதம் இன்னது மனிதர்களின் வார்த்தை இன்னது என்று வகுத்துரை முடியாமற் போனதினுல் இதன் உண்மையை உலகோர்களுக்கு வகுத்துக்காட்டவே குர்ஆன்ஷரீபென்னும் திருமறை இறங்கப்பெற்றது.

முந்தின வேதங்களாகிய பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடுகள் எந்தக்காலத்தில் யாரால் என்ன பாஷையில் எழுதப்பட்டதென்றும் அந்த எழுதப்பட்ட பாஷையை மறு

பாஷையில் மொழிபெயர்த்தவர் யாவரென்றும் அவரின் யோக்கியாம்சம் எப்படி யென்றும் தெரியவரவில்லை.

மூஸாநபியின் கிதாபுகள் 5-ம் மூஸாநபியால் எழுதப் பட்டிருப்பதில்லை யென்று டாக்டர் (மிடல்டன்) வகைரு சொல்லுகிறதாய் (பின்னீசிக்லூபேதியா) என்னும் சரித் திரத்தின் 10-வது வால்யம் 119-வது பக்கத்திலெழுதப் பட்டிருக்கிறது மல்லாமல் டாக்டர் (சிக்கண்டர் கிடஸ்) என்பவரும் அப்படியே தமது ஆகமத்தில் எழுதி மூஸா நபிக்கு 500 வருஷத்திற்குப்பிறகு ஷை 5 கிதாபுகளும் எழுதப்பட்டிருக்கிறதாக சொல்லுகிறார்.

இதற்கநுகூலமாக மூஸா அப்படிச்செய்தான் இப் படிச் செய்தா னென்று பைபளில் எழுதப்பட்டிருக்கிறது மன்றி உபாகமம் (5-ம்மோசே) அ. 34 வ. 5, 6, 7, 8. வசனங்களில்;

"அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின் படியே மரித்தான். அவர் அவனை மோவாப் தேசத்தி லுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம் பண்ணினார். இந்த நாள் வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான். மோசே மரிக்கிற போது நூற்றிருபது வயதாயிருந்தான். அவன் கண் இரு ளடையவுமில்லை. அவன் பெலன் குறையவுமில்லை. இஸ்ர வேல் புத்திரர் மோவாபின் சமனான வெளிகளில் மோசேக் காக முப்பது நாள் அழுதுகொண்டிருந்தார்கள். மோசேக் காக அழுது துக்கங்கொண்டாடின நாட்கள் முடிந்தது" என்று கண்டிருப்பதும் மூஸா நபியவர்களால் எழுதப்பட வில்லை யென்பதற்கு நிகரற்ற சாக்ஷியாக இருக்கிறது.

பழைய ஏற்பாட்டின் நிலைமை தெரிந்துகொண்டபின் புதிய ஏற்பாட்டை கவனிப்போம். அதுவும் இன்னாரால்

இன்னகாலத்தில் இன்ன பாஷையில் எழுதப்பட்டதென்றும் அதை மறுபாஷையில் பெயர்த்தவர் யாவரென்றும் அவரின் நிலைமை யாதென்றும் தெரிவிக்கப்படவில்லை. கிறிஸ்தவர்களில் விசேஷ மதிப்புடைய ஹாரன் தமது தப்ஸீரின் வா. 4 பாகம் 2 பிரிவு 2-ல் நான்கு இஞ்சிலைப் பற்றியும் தமது அபிப்பிராயத்தை வெளியிடுகிறதாவது:- 1-வது இஞ்சீல் (மத்தேயு) கி. பி. வருஷம் 37. 38. 43. 48. 61, 62. 63. 64. ஆகிய வருஷங்களிலும் 2-வது இஞ்சீல் (மாற்கு) 56. 65. 60. 63. வருஷங்களிலும் 3-வது இஞ்சீல் (லூகா) 53. 63. 64. வருடங்களிலும் 4-வது இஞ்சீல் (யோவான்) 68. 69 70. 97. 98 வருடங்களிலும் உண்டுபண்ணியிருக்கலாம் என்பதே.

இவற்றின் மூலமாக பழய புதிய ஏற்பாடுகள் உறுதியற்றதும் நம்பத்தகாததுமென ஸ்திரப்பட்டு விட்டதால் இவற்றைத் திருத்தி உண்மையை உலக மக்கட்கு எடுத்துக்காட்ட குர்ஆன் ஷரீப் வரவேண்டியது அவசியமாயிற்று.

(2) இன்னும் பிதா குமாரன் பரிசுத்த ஆவி யென்று இறைவனை விக்கிரக மதஸ்தருக்கொப்பாய் பகிர்வதும் நபிமார்களை குடியர்களென்றும் விபசாரிகளென்றும் இன்னும் பலவிதமான பொய்களையும் எழுதிவைத்திருப்பதனுல் இறைவனையும் அவனது அருமைத்தூதர்களையும் இப்பழிமொழிகளைவிட்டு தூய்மைப்படுத்தி உண்மையைக்கொண்டு உலகமக்களை ஆட்சி புரியவுமே குர்ஆன் ஷரீபு என்னும் திருமறை இறங்கவேண்டிய அவசியமேற்பட்டது.

(3) முந்தின தீர்க்கதரிசிகள் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கும் ஒரு ஜாதியாருக்கு மட்டுமென அனுப்பப்பட்டிருக்கிறார்கள். "அதற்கு இயேசு காணுமற்போன ஆடு

களாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனே யன்றி மற்றப்படி யல்ல வென்றார்". (மத்தேயு 15. அ. வ. 24.) அக்குறையை நிவர்த்தித்து எக்காலத்துக்கும் எச்சாதியாருக்கும் பூரணமாக அனுப்பக் கடவுள் சித்தமிருந்ததால் குர்ஆன்ஷரீப் எனும் வேதம் இறங்கலாயிற்று.

(4) முற்காலத்திலுள்ள தீர்க்கத்தரிசிகள் எக்காலத்துக்கும் பொருத்தமான ஓர் தீர்க்கத்தரிசி வருவார். அவர் வந்து எல்லா விஷயங்களையும் பூரணமாய் கற்பிப்பார் என்ற முன்னறிக்கை பிரார்த்தனையின்படி ஒரு கடைசி நபியும் அந் நபியின்பேரில் இறங்கப்பெற்ற குர்ஆனென்னும் வேதமும் வெளிப்பட வேண்டியது அவசியமாயிற்று.

ஆகவே இக் கார்ணங்களை முன்னிட்டு குர்ஆன்ஷரீப் இறங்கப்பெற்றதென்பதை கிறிஸ்தவர்கள் மெய்யறிவினுலுணர்ந்து சத்தியத்திற் சார்வார்களாக.

வஸல்லல்லாஹு அலந் நபிய்யி சைய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மயீன். வல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

முற்றிற்று.

மீரானியா பிரஸ், திருநெல்வேலி 9–'28.

67

பிஸ்மில்லாஹ்

# "முஸல்மான்"

## இஃதோர் "இஸ்லாமிய" அரபி மாதாரம்ப தமிழ் மாசிகை.

நம் தமிழ்நாட்டு முஸ்லிம் சகோதரர்களே!

"முஸல்மானெ"ன்ற நாமத்துடன் வெளிவந்துலாவுகி[illegible] சஞ்சிகை இன்னதென உங்களுக்குத் தெரியுமா? இஸ்லாமி[illegible] உண்மைத் தத்துவங்களையும், மூலக்கொள்கைகளையும், உணர்ந்[illegible] கொள்ளவேண்டாமா? குர்ஆன், ஹதீது முதலிய மார்க்க நூ[illegible] களில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களை அறிந்துகொள்ள உ[illegible] ளுக்கு ஆவலில்லையா? அருட்பெற்ற ஸஹாபாக்களின் நட[illegible] வழக்கங்களை அறிந்து அதன்படி ஒழுகவேண்டாமா? சமத நிபுணர்களாகிய, இமாம்கள் பெரியோர்களுடைய சரிதைகளை நீங்கள் படித்துக்கொள்ளவேண்டாமா? இஸ்லாத்தின் சமாசக் கொள்கைகளையும், சகோதரத்துவம், சமத்துவம், ஒற்றுமை முதலிய [illegible] வற்றின் அறிவுகளைத் தெரிந்துகொள்ள உங்களுக்கு விருப்ப மில்லையா? காதியானி மதஸ்தர் முஸ்லிம்களையெல்லாம் குறைகூறி புது மார்க்கத்திற் கழைக்கிறதையும், சிலர் முஸ்லிம்களுடைய கோலத்திலும், சிலர் சுன்னத்து ஜமாஅத்தடைய கோலத்திலும் தோன்றி, இவ்விஸ்லாமிய மூலக்கோட்பாடுகளைப் புரட்டி வருகிற தைத் தெரிந்து நீங்கள் விலகிக்கொள்ளவேண்டாமா? இன்னும், அது சுன்னத்துஜமாஅத்துக்கு விரோதமின்றி மார்க்க விஷயங்களை அவரவர்களுக்கு ஊட்டி மதவிரோதசெயற்களை அவ்வப்பொழுது கண்டித்து பிறமதஸ்தர்களால் இஸ்லாமுக்கு எற்படும் இடையூறு களையும், அதற்குத்தக்க பரிகாரங்களையும் விளக்கி வருகிற ஓர் அழகிய சஞ்சிகையல்லவா இது. என் இன்னும் சந்தாதாராய்ச் சேராது நிற்கின்றீர்கள். இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

வருட சந்தா உள்நாடுகளுக்கு ரூ. 1—8—0 } தான்
வெளிநாடுகளுக்கு ரூ. 2—0—0 }

பத்திராசிரியர்,

முஸல்மான் ஆபீஸ், தேன்காசி.

## இதரபுத்தகங்கள். 68

வியாசக் கோவை .... ,, 1—0—0
கமருந்நின்பே ... ... 1—4—0
முஸ்தபாகமால்பாக்ஷா சரித்திரம் 0-12—0

## உர்தூ கிதாபுகள்.

ஷஹாததுல் குர்ஆன் முதற்பாகம்:-இதில் ஹஸரத்ஈஸா (அலை)மரணமாகவில்லை வானத்தளவிலுயர்த்தப்பட்டதென்பதை ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. 0—14—0
ஷை இரண்டாம் பாகம். .... 1—0—0
இஸ்தின்காபுல் முஸ்லிமீன்:— அஹ்மதியர்களைப்பற்றிய உலமாக்களின் தீர்ப்பு. ... .... 0—5—0
4. பஷாரத்தேமுஹம்மதீ:- காதியானி வகுப்பார்களின் குருவின் நபித்துவத்தை மறுக்கப்பட்டிருக்கிறது. 0—8—0
5. தஹக்கீக்கா ஸஹீஹ்:— ஹஸரத்ஈஸா (அலை) ... காஷ்மீரில் அடக்கப்படவில்லையென்பதை விபரிக்கப்பட்டிருக்கிறது. ... .... .... 0—4—0
6. முஜத்தித்:— இதில் மிர்ஸாஸாஹிபு முஜத்தித் அல்லவென்பதை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. 0—4—0
7. தர்தீதுநுபுவ்வத்தே காதியானி:-மிர்ஸாஸாஹிபு நபியென்பதை தக்கஆதாரத்துடன் மறுக்கப்பட்டிருக்கிறது 0–12-0
8. முபாஹிஸா கோஷ்த்குரீ:- இதில் முஸ்லிம் மௌல்விக்கும் ஆரியபண்டிதருக்கும் மாமிசம்புசிப்பதன் விஷயமாய் விவாதம் நடத்தப்பட்டு உண்மைக்கு ஜெயம் கிடைத்திருக்கிறது. 0—9—0

கிடைக்குமிடம்:-

முஸல்மான் ஆபீஸ், தென்காசி.